தனிச்சுற்றுக்கு மட்டும்

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



தை - 2025

# காற்றுவெளி

**கலை இலக்கிய இதழ்**

தை - 2024

படைப்புக்கள் அனுப்ப :
Mullaiamuthan1954@hotmail.com
mahendran1954@hotmail.com

படைப்புகளின் கருத்துக்களுக்கு
படைப்பாளர்களே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- வருட சந்தா : 10.00 பவுண்ட்
- வங்கி இலக்கம் :
  R.Mahendran,
  A/C No : 90759821
  Sort.Code : 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


வணக்கம்,

யாவரும் நலமா?

யாவர்க்கும் புத்தாண்டு,பொங்கல் வாழ்த்துகள்.

காற்றுவெளியின் பயணம் நினைத்தபோது வரும் இதழாக அச்சில் வந்த காலம் முதல் மின்னிதழாக வெளிவரும் இன்றைய நாள் வரைக்கும் பல படைப்பாளர்களை இணைத்துள்ளோம் என நினைக்கையில் மகிழ்வாகவும்,பெருமையாகவும் இருக்கிறது.புதிய படைப்பாளர்களுடனும் இணைந்து பயணிப்பதில் புதிய உற்சாகம் பிறப்பதை மறுக்கமுடியாது.புத்தாண்டிலிருந்து புதிய நம்பிக்கைகளை,கனவுகளை நிறைவேற்றும் வருடமாக அமைய வேண்டும் என்பதில் ஆர்வம்,கரிசனை கொண்டுள்ளோம்.சென்ற ஆண்டில் நிறைவேற்ற நினைத்திருந்த செயல்பாடுகள் இவ்வாண்டு நிறைவேறல்வேண்டும் என்பதும் எமது பிராத்தனை.யாருடனும் பகைமை பாராட்டாது இதுவரையும் பயணித்ததைப் போலவே புதிய ஆண்டிலும் பயணிக்கவே ஆர்வம் கொண்டுள்ளோம்.அவரவர் கொள்கைகள்,அரசியல் செயல்பாடுகளை தவிர்த்து இலக்கியத்திற்காக இணைவோருடன் தொடர்ந்து நட்புடனே இணைந்து பயணிப்போம்.

காற்றுவெளிக்கான வாசகர் வட்டத்தை விரிவாக்கம் செய்யும் ஆண்டாக இவ்வாண்டு அமையும்.

யுத்தம்,நோய் அச்சுறுத்தல்கள் இல்லாத உலகு அமைத்தல் வேண்டும் என்கிற சாதாரண மனிதர்களைப் போல காற்றுவெளியும் பிரார்த்திக்கிறது.

நட்புடன்,

சோபா

*01/01/2025*

# படைப்பாளர்கள்

**கவிதைகள்:**

1. *S.சுடர்நிலா*
2. *கி.கவியரசன்*
3. *இரா.வெங்கடேஸ் குமார்*
4. *பிரான்சிஸ் திமோதிஸ்(இலங்கை)*
5. *கவிஞர்.புதுகை ஆதீரா(புதுக்கோட்டை)*
6. *DR.ஜலீலா முஸம்மில்(ஏறாவூர்)*
7. *தில்லானா (மு. மோகனலட்சுமி)*
8. *கிரேஸி மேரி.அ(திருச்சிராப்பள்ளி)*
9. *பாவேந்தல் பாலமுனை பாறூக்*
10. *ஜெயதேவன்(நன்றி:அநாமிகா ரிஷி)*

**சிறுகதைகள்:**

1. *தமிழ்த்தாகம் (பகவதி)*
2. *கமலினி கதிர்(சுவீஸ்)*
3. *கார்த்திக் கிருபாகரன் (எ) சீனிவாசன்*
4. *நௌஷாத் கான்.லி*
5. *இத்ரீஸ் யாக்கூப்*

**கட்டுரைகள்:**

1. *முனைவர் சு.சோமசுந்தரி(மதுரை)*
2. *த.சிவபாலு (கனடா)*

# S.சுடர்நிலா கவிதைகள்

### இரைமீட்பு

சளி பிடித்த பனிக்காற்றின் சுவாசத்தில்
பெயர்தெரியாக் காட்டுப் பூக்களின் வாசம்
உதிர்ந்தழியும் சிறுபொழுது

கூடிழந்த தேனீக்களின் வழிமறிப்புப்
போராட்டத்தால்
முடங்கிய காட்டுவீதியில்
சிதைந்துபோன தேன் வதைகளைத்
திருடும் எறும்புகளின் குதூகல ஊர்வலங்கள்

ஒட்டடைகளாய் தூங்கும் கருமுகில்களைத்
துடைத்துச் சுத்தம் செய்யும் வானில்
செம்மண் திட்டுக்களாய்
சூரியக் கறைகள்

விறைப்பூசி ஏற்றப்பட்ட
உடலாய் உணர்வற்றிருக்கும்
மரநிழலை விரைந்து
தின்கிறது இருள்

இரைமீட்டு மகிழ்கிறது
மனிதப்பெருவிலங்கு..



### விருப்பு வாக்கு

கவசங்களைக் கழற்றி வை..
இன்னும் பிடுங்கவில்லை
சிறைப்பறவையின்
முதுகில் தான்
கனக்கிறது குறுவாள்
நீ அனுப்பிய
சமாதான ஓலை மடிக்கப்பட்டிருக்கிறது
சொல்விலங்கால்..

பெருயுத்தம் எதற்கு?
உன்னோடு யுத்தமிட
ஒன்றுமில்லை என்னிடம்..
வேண்டுமானால்
எனக்கு முன்பே
அனுப்பிவை
நீ வனையும் வதந்திகளிலொன்றை
என் பயணம் முடிவதற்குள்
அவர்களே வைத்துக்கொள்வார்கள் நீ விரும்பிய படி
கண் காது மூக்கெல்லாம்..
நான்,
கொஞ்சம் அழுவேன்
பின் உடைந்துபோய்
மூலையிலேயே அமர்ந்துவிடுவேன்..

அல்லது என்றும் போல்
உன் விருப்பு இலக்கத்தை மட்டும்
வேட்பாளராக்கு
வாக்கிடு
வெற்றிபெறச்செய்

என்மீது
ஏன் தொடுக்கிறாய் பெருயுத்தம்
உன்முன்னே
நான் நிராயுதபாணி..

இரா.வெங்கடேஸ் குமார்

# மருதம் தந்த குறிஞ்சி மணம்

இயல்பாய் தென்றல் இயல்பாய் மூங்கிலில் ஓட
குழல் நாதம் இதமாய் உருகி காதை கவர்ந்து இசைக்க
அடர்ந்த கானகத்தில் ஆனந்தமாய் பறவைகள் பாட
காட்டின் நரம்புகளாய் ஆறுகளும், அருவிகளும் ஆனந்தமாட
செழித்த குறிஞ்சி நிலத்தில் பூ வாசம் வீசிடும்
காதல் கொண்ட மருத நிலமோ குறிஞ்சியை காண
மருதத்தில் பூத்த மல்லிகையோ குறிஞ்சியை ஈர்க்க
காதல் மொழிகள் தென்றல் துணையால் பரிமாற,
பரிணாமமாய் பூத்த குறிஞ்சியின் வாழை மரங்கள் மருதத்திலே
மருதத்தில்ல் மலர்ந்த மல்லிகை குறிஞ்சியின் கூந்தலிலே
காதலில் பூத்தது குறிஞ்சி, மருதத்தில் மாற்றம்
மருத நிலத்தில் குறிஞ்சி மணல் தந்த பழத்தின் வாசம்
குறிஞ்சியின் வெட்கத்தில் மருத பூவின் வாசம்.

---

# கி.கவியரசன் கவிதைகள்

*சலனமற்ற நீரில் பட்டாம்பூச்சிகள்*
*அமர்ந்து சென்றதும்*
*ஒன்றோடொன்று முட்டிக் கொள்கின்றன*
*நீரலைகள்....!!!*

◎

*ஏதேனுமொரு கவிதை*
*பிடிபடுமென்று*
*வானில் தூண்டிலிட்டு அமர்ந்திருக்கிறேன்*
*நீண்ட நேரமாய்......*
*பிடிபடாமல்*
*காற்றில் அலைகிறது மனம்...!!!*


◎

*நண்பகல் நேரம்*
*சுடுகின்ற தரையில் கட்டெறும்பொன்று*
*இழுத்துக் கொண்டு ஓடுகிறது*
*தன் நிழலை...!!!*



தமிழ்த்தாகம்

# வானத்திற்கு முழம் !.........



எனக்கு மட்டும் என் குடும்பத்துடன் ஒன்றாய் வாழும் வரத்தை பரம்பொருள் படைக்கவில்லை...

பகலில் என் கணவனின் பிரகாசத்தில், அந்தி காலையில் அவருக்காய் காத்திருப்பேன்; பூக்கள் மலர்வதைப் போல் கொஞ்சம் கொஞ்சமாய் என் முன்னே துளிர் விடுவார் நீண்ட வண்ண வண்ண தூரிகை போட்டு புன்னகையிடுவார்.

ஒளியும் வெப்பமுமாய்த் தானம் அளித்து கொண்டுடிருக்கும் வேளையில் அவரை பார்க்க முடியாது. தினமுடிவில் தரிசிக்க செல்லும் பொழுது, படர்ந்த தூரிகையை சுருக்கி நீட்டி கூச செய்வார். அவரும் நானும் துளியையும் தொட்டுக்கொள்ளாமலே..... மேனிசிலிர்த்து மூடிய கண்களைத் திறக்கும் நேரம், பொழுது சாய்ந்துக் கொண்டிருந்தது கருணைப் பார்வையால் பார்த்துக்கொண்டே மறையும் தருவாயில் இருப்பார்; சுருங்கிய என் முகம்: அவர் மறைந்தும் தோன்றியும் எப்போதும் உன்னுடன் இருப்பேன் என்று கருப்பொருளை உணர்த்த!

நான் மலர .....

அவர் மறைவார் ......

அவர் முழுவதும் மறைந்த பின்னர் என்னை காக்க என் மகன்

வந்துவிடுவான்.

அவன் நாளுக்கு நாள் இளைத்து வளரும் பாங்கு பெற்றவன் .

என்னதான் முழுமையாக வளர்ந்தாலும், துரும்பாய் தேய்ந்தாலும் என்னை இரட்சிக்க என்றும் அவன் தனி சுடரொளியாய் காத்து நிற்பான்...

பேரனை தாத்தா கதை சொல்லி தூங்க வைக்கும் காலம் போய் பேரன் பேத்திகள் பாட்டியை தாலாட்டித் தூங்க வைக்கும் காலம் வந்தது என்று தோன்றியது பேரக் குழந்தைகளின் அன்பினால்; என் பேரர்களின் குறும்பு தாலாட்டில் கண் அயர்ந்து உறங்விடுவேன் .

உறக்கத்தில் விழுந்தாலும் கீரல் படா வண்ணம் என்னை பத்து மாதம் கருவில் சுமந்து உலகம் பார்த்த நாள்முதல் இக்கனம் வரை தாங்கிக் கொள்ளும் என் அன்னை!.. என் குடும்பத்திற்கு என்றும் வற்றா வயது அளித்திருக்கிறாய். இதைவிட வேறு என்ன வேண்டும் இறைவா!

இவர்களுடன் ஒரே ஒரு வாழ்க்கை என் சுவாசம் சுவாசிக்கும் கொஞ்சநாள் இவர்களுடன் வாழ்ந்தால் போதும் போதும்.. உன் கருணையால்! என்று கண்ணீர் துளிகளின் ஏக்கத்துடன் இந்த கடிதத்தை முடிக்கிறாள்.. ஆதவி.

தன்னை இயற்கையோடு பிணைத்து கொண்டு வாழ வேண்டும் என்ற ஆசையவளுக்கு, இக்கடிதத்தில் அவள் குடும்பம் என்று குறிப்பிடுவது. கணவன் - சூரியன், தூரிகை - மேகம், மகன் - சந்திரன், பேரப்பிள்ளைகள் - நட்சத்திரங்கள், அன்னை - நிலமகள்.

ஆதவி இயற்கையின் மீதான ரசனை சமீப காலங்களில் தான் தோன்றியது...ஆனால் அவளுக்குள் சிறு காலத்திற்குள்ளேயே இயற்கையை அரவணைத்தவளாக தோன்றியது அவளுக்கு !

இறைவனாகவே பார்க்க ஆரம்பித்தாள் பசுமையை . அதில் ஒரு நாள் தன்னை இயற்கையுடன் சேர்த்து பிணைத்துக் கொண்ட தன் எண்ணத்தின் பூரிப்பை வரமாய் கடிதம் எழுதினால் இறைவனுக்கு.

சில மணி நேரம் நகர்த பின்னர் தான் தெளிவிற்கு வந்தாள் ..

மானுடர்கள் அற்று இறைவனின் பிரதியான இயற்கையுடன் வாழ முனைந்தவள் நான் என்றால். ஆனால் நான் என்று சொல்வதற்குள்யே ஒரு ஜீவன் - ஆத்மா .....

ஆம் உயிருள்ள தன் குழந்தை இருப்பதை உணர்ந்தாள் அதற்கு நான் தான் தாய், நடக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும், ஆசானாக ஞானத்தை ஊட்ட வேண்டும் என்ற உண்மையை உணர்ந்தால் , தன் ஆன்மாவிற்கு தானே குரு மற்றும் எல்லாமும் என்று புரிந்து கொண்டு ,


தன் கடமையை உணர்ந்து மண்ணிலிருந்து விண்ணுக்கு முழம் போட்டதை எண்ணி அந்த கடிதத்தை எடுத்து கிழித்து காற்றில் பறக்க விட மனமின்றி மண்ணிற்குள் புதைத்து விடுட்டால்.

கடிதம் மண்ணுக்குளே உரமாகவதைப்போல் தன் நெஞ்சிலும் துளிர்த்த ஆசைகளை மனதில் ஒரு வோரமாய் போட்டுக்கொண்டு ;

தன் ஆன்மாவை வளர்க்கும் நெருக்கடி நேரங்களில்

வானத்திற்கும் முழம் போட்டதை எண்ணி உவகைப்பூத்தாள் .....

கமலினி கதிர்(சுவிஸ்)



# என் சுவாசக்காற்றே மன்னிப்பாயா

அன்று பனி மூட்டம் அதிகமாகவே இருந்தது. வைத்தியசாலை கட்டிலில் படுத்திருந்த பாலா தன் இளமைக்காலத்தை நினைவு கூர்ந்தார்.லண்டன் பனி மூட்டம் பதுளையை நினைவு படுத்தியது. பிறந்து வளர்ந்த பதுளை மண்ணும்,மலைகளும்,ஓடைகளும் கண்ணுக்குள் வந்து வந்து போயின.துன்ஹிந்த நீர்வீழ்ச்சி மனதில் துள்ளி விளையாடியது.நோயின் வேதனையைவிட நினைவுகள் நெருப்பாய்ச் சுட்டெரித்தன.சரிந்து சரிந்து வளைந்து செல்லும் வீதியும்,ஏற்றமான மலையும் கொழுந்துக்கூடைகளுடன் வரிசையாகச் செல்லும் பெண்களும் மனக் கண்ணில் வந்துவந்து போயினர்.எந்தநேரமும் லேசாகத் தூறல் தூறுவதும் தேயிலை வாசனையைச் சுமந்து வீசும் காற்றும் நினைவில் வந்து மோதின.அந்தத் தேயிலை வாசத்தை முகர்ந்து கொண்டேயிருக்க வேணும் போன்றதொரு ஆசை சிலவேளை களில் ஏற்படுவதை நிறுத்த முடியாமலிருந்தது.இப்போது எழுபது வய தைக் கடந்த நிலையில் இளம் பராயம் மனவானில் நடை போட்டது. அந்த நினைவுகளே நோயின் தாக்கத்திலிருந்து சற்றேனும் அவரை மறக்கச் செய்கிறது.பாலா எப்போதோ வாசித்த ஒரு வரிகளை அடிக் கடி நினைத்துக் கொள்வார். 'ஒருவரை மரணத்தில் இழக்கும்போது வரும் கண்ணீரை விட அவர் நினைவுகள் தொடும் போதெல்லாம் வரும் கண்ணீர்த் துளிகளுக்கு வலிகள் அதிகம்'.கான்சர் வந்த நாளிலிருந்து பழைய நினைவுகள் அதுவும் காதலி சுமணாவின் நினைவு வாட்டியபடியே இருந்தது. காதலியை மறப்பதற்கு வடிகாலாய் அமைந்த ஓரே விடயம் புகைத்தலுக்கு அடிமையானதுதான்.ஓயாமல் புகைத்ததன் விளைவுதான் இந்த நோய்.புகைத்தல் கொடுத்த பரிசு கான்சர்.

பதுளை ஊவாக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போது தமிழ் மீடியம் மாணவர்களை விட சிங்கள மாணவர்களுடனேயே இடைவேளையை பாலா கழிப்பது வழக்கம்.விளையாடுவதும் அவர்களுடன்தான். பிரேம்லால் என்ற மாணவன் பாலாவின் நெருங்கிய நண்பன்.அவன் இவர்கள் வீட்டுக்கு வருவதும் பாலா அவர்கள் வீட்டுக்குப் போவதும் வழக்கமாக இருந்தது.பாலா பிரேம்லால் வீட்டுக்கு அடிக்கடி போவதற்கு முக்கிய காரணமாக சுமணா இருந்ததை வெளிப்படையாக ஒப்புக் கொள்வதில்லை.சுமணாவின் சந்தன நிறமும் ரோஜா நிறக் கன்னமும் சிரிக்கும் பெரிய கண்களும் எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைக் கும்.அவளின் காந்தக் கண்களின் வலையில் மயங்காதவர்களே இல்லை எனலாம்.தன்னைச் சுற்றிச்சுற்றி வரும் எத்தனையோ சிங்கள இளைஞர்களிடம் தன் மனதைப் பறிகொடுக்காத சுமணா பாலாவின் மேல் காதல் வைத்ததை நினைத்து பாலாவுக்கு அளவிட முடியாத பெருமை.மாணவ பருவத்தில் தோன்றிய காதல் பட்டப்படிப்பு படித்து முடித்து ஆசிரியையாக கடமையாற்றும் போதும் தொடர்ந்தது.பாலா ஓலெவல் படிப்புடன் பாங்க் வேலையில் நுழைந்தான்.

பாலா பதுளையிலேயே வங்கியில் கடமையாற்ற சுமணாவும் பதுளை விசாகா பெண்கள் கல்லூரியில் ஆசிரியப் பணியில் சேர்ந்து கொண் டாள்.இருவரும் ஒருமித்து சேர்ந்தே பேருந்தில் பயணிப்பதும் வழக்கமா யிற்று.சுமணா பாலாவுக்குப் பிடித்த பால்சோறும்,நெத்தலிக் கருவாட்டுப் பிரட்டலையும் அடிக்கடி கட்டிக்கொண்டு வருவாள்.அவர்கள் வயலில் விளைந்த வெள்ளைப்பச்சையரிசி தேங்காய்ப்பாலுடன் குழைந்து தேவாமிர்தமாக இருக்கும்.அதற்கு சைட் டிஷ் தூக்கலான காரத்துடன் அந்த நெத்தலி பிரட்டல் கறி இன்னும் பாலாவின் நாக்கில் இருப்பது போலவே இருக்கும்.பாலாவும் தன் வீட்டில் அம்மாவை சாப்பாடு கட்டித் தரவேண்டாமென்றும் தான் வெளியில் சாப்பிடப் போவதாக சொல்லி ஏமாற்றி விடுவான்.வார விடுமுறைகளில் எங்காவது சுற்றிவிட்டு வெளியில் உணவு அருந்தி விடுவார்கள்.பதுளை ரவுணிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தொலைவிலிருக்கும் துன்ஹிந்த நீர்வீழ்ச்சிப் பகுதிக்கு அடிக்கடி சென்று தங்கள் காதலை மென்மேலும் வளர்த்துக் கொண்டு இருந்தார்கள். ஆவேசத்துடன் பாய்ந்து வரும் துன்ஹிந்த நீர்வீழ்ச்சியிலி ருந்து தத்தளிக்கும் நுரைக் குழந்தைகளை மெதுவாகத் தாலாட்டித் தூங்க வைக்க முயன்ற நீரோட்டத்தைப் பார்த்து இருவருமே பரவசமாகி விடுவார்கள். நுரையாகப் பொங்கி வழியும் நீர்த்துவலைகளில் நனைவதென்றால் சுமணா குழந்தையாகி விடுவாள். துன்ஹிந்த நீர்த்தூ றல்களுடன் சுமணாவின் அன்புத் தூறலிலும் பாலா நனைந்ததை அவரால் மறக்கத்தான் முடியுதா?சோவென்று கொட்டும் அந்த நீர்வீழ்ச் சியின் இரைச்சல் சத்தம் இன்னுமே பாலாவின் காதுகளில் ஒலித்துக் கொண்டுதானிருக்கிறது.

நுவரேலியாவிலிருக்கும் ஹக்கல தாவரவியல் பூங்காவில் பூக்களோடு பூவாய் தெரிந்த சுமணாவுடன் சுற்றித் திரிந்தபோது அவள் வதனத் தையும்,பூக்களையும் ஒப்பிட்டு மகிழ்ந்ததும் மறக்கக்கூடிய விடயங்களா? அதனருகிலிருக்கும் இராவணனால் சீதை சிறை வைக்கப்பட்ட இடம் என்று நம்பப்படும் சீத்தாஎலிய சென்று மகிழ்ந்ததும் பாலாவால் மறக்க முடியாதவைதான். தூர இடங்களுக்குச் செல்லும் போது சந்திர னையோ,பிரேம்லாலையோ கூட்டிச் சென்று விடுவார்கள்.

அவள் அண் ணன் பிரேம்லாலும்,பாலாவின் தம்பி சந்திரனும் அவர்கள் காதலுக்கு ஆதரவாகவும் பக்கபலமாகவுமே இருந்தார்கள்.சுமணாவுக்காக பாலா பௌத்த விகாரைக்குச் செல்வதும் பாலாவுக்காக சைவக்கோயில்களுக்கு சுமணா போவதும் வழக்கமாயிற்று.அவர்களுக்குள் எந்த வித மத வேறுபாடோ,இன வேறுபாடோ இருந்ததில்லை.77ம் ஆண்டு இனக் கலவரம் வரும் வரைக்கும் எந்தச் சிக்கலும் இருக்கவில்லை.இந்தக் கலவரம் கொழும்பை விட கண்டி,பதுளை,பண்டாரவளை என்று மலையகத்தை மிகவும் ஆட்டி வைத்துவிட்டது.பேராதனை பல்கலைக் கழகத்தில் இருக்கும் குறிஞ்சிக்குமரன் கோயிலில் இருந்த மயிலைக் கூட குரூரமாக வெட்டியதைத் தொடர்ந்து பாலாவின் வீட்டில் இனவிரோதம் குடி கொள்ளத் தொடங்கியது.ஐம்பது வருடங்களுக்கு மேல் தாயாய் பிள்ளையாய் வாழ்ந்த உறவுகள் விலகத் தொடங்கின. அம் மாவும்,அப்பாவும் கூட அதற்கு விதிவிலக்கல்ல. முன்பே அவர்கள் காதல் தெரிந்திருந்தாலும் இப்போது அதனை அவர்கள் வேறுவிதமாக கையாள நினைத்தது பிரச்சனையை கிளப்பியது.பாலாவின் தங்கையும் இதைச் சாக்காக வைத்து தாயைத் தூண்டி விட்டாள்.'நீ சுமணாவைக் கல்யாணம் செய்ய நான் ஒருக்காலும்விடமாட்டன். நல்லாயிருப்பாங்கள். திடீரென ஒரு கலவரம் வந்தால் கொல்லவும் தயங்க மாட்டாங்கள் மறந்திடு அவளை'அம்மா சொல்லத் தொடங்கினாள்.'அம்மா! சுமணா டை குடும்பம் அப்பிடியில்லையென்று உங்களுக்குத் தெரியாதா?இந்தக் கலவரத்தின் போது அவை எங்களுக்கு எவ்வளவு ஆதரவாயிருந்தவை எங்களைப் பாதுகாத்து வைத்திருந்தது அவைதானே.நான் சுமணாவை தவிர யாரையும் கல்யாணம் கட்ட மாட்டன்.செய்ய விடாட்டி தனியவே இருந்திடுவன். காதலித்த பெண்ணைக் கல்யாணம் செய்ய முடியாவிட்டா லும் நினைவுகள் எனக்குச் சொந்தமானவை.வீட்டுத் தோட்டத்து மலர் கள் யாரோ ஒருவருக்கு விற்கப்பட்டாலும் அதன் மணமும்,அழகும் மனதை விட்டுப் போகக் கூடாது என்று சொல்லலாமா?' உறுதியாக பாலா சொன்னாலும் அவனை மாற்றி யாராவது தமிழ்ப்பிள்ளையை பாலாவிற்கு கட்டி வைப்பதிலேயே குறியாக இருந்தார்கள்.

படுத்திருந்த பாலா மெல்ல எழுந்து பக்கத்திலிருந்த லாச்சியைத் திறந்து சுமணாவும் தானும் சேர்ந்து நிற்கும் போட்டோவை எடுத்தார். அது துன்ஹிந்த நீர்வீழ்ச்சிப் பின்னணியில் எடுக்கப்பட்ட அழகான கறுப்பு வெள்ளை போட்டோ.வலு நெருக்கமாக கணவன் மனைவி போலத்தான் பார்ப்பதற்கு இருந்தது.நிறைய போட்டோக்களை தங்கை இரக்கமில்லாமல் எரித்துவிட்டாள்.தப்பிப் பிழைத்தது இந்த ஒரு போட் டோதான்.பெருமூச்சு ஏற்பட மென்மையாக வருடிக்கொடுத்தார்.மனசு வலித்தது.நீ நல்லாயிருக்க வேணும் என்ற நினைவைத் தொடர்ந்து இப்போது அவள் இருக்கிறாளோ இல்லையோ?இன்னொருத்தன் மனைவியைத் தான் நினைப்பது தவறு என்ற நினைவு வரும்போதெல்லாம் 'இன்னொருத்தன் மனைவியை நான் நினைக்கேலை. என் காதலி சுமணாவைத்தான் நினைக்கிறேன்' என்று தன்னைத்தானே ஆறுதல் படுத்திக் கொள்வார்.சுமணாவின் நினைவில் ஆழ்ந்திருந்த வரை 'ஹாய் பாலா!ஆர் யூ ஓகே? என்று கேட்டவண்ணம் ஹ_செயின் வந்தார்.ஈரான் நாட்டைச் சேர்ந்தவர்.மனைவியுடன் பாலாவின் இருப்பிடத்திற்கருகே லிவர்பூலில் வசிப்பவர்.மனைவி அரீனா வெகு அன்பான, ஒரு தங்கை போல் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக தான் செய்யும் உணவுகளைத் தனித்திருக்கும் பாலாவுக்கு கொடுப்பதில் தனி அக்கறை கொண்டவர்.பேசுவதற்கு ஆங்கிலம் தெரியாவிட்டாலும் அராபிக் மொழியில் கூறிக் கணவனை ஆங்கிலத்தில் சொல்லச் சொல்லுவாள். பாலா அவர்கள் வீட்டில் ஒருவர் போலவே இருந்தார். அரீனாவைப் பார்க்கும்போது அன்பு செலுத்துவதற்கு மொழி அவசியம் இல்லையென்பது பாலாவுக்கு புரியும். ஹுசெயின் தன் நாடான ஈரானை ப்பற்றி வெகு உயர்வாகச் சொல்லுவார்.தமிழ் நாகரீகம் போல் தங்கள் நாகரீகமும் முதன்மையானது என்றும் தாங்கள் பேர்சியர் என்பதில் பெருமைப்படுவதாகவும் சொல்லுவார்.தங்கள் மூதாதையர் ஜோராஸ்ரியனிச மதத்தைக் கைக்கொண்டார்களென்றும் கிரேக்கர்கள் தங்கள் நாட்டைப் பிடித்த பின்புதான் ஏதேதோ மதங்களைக் கைக் கொண்டு இப்போது இஸ்லாம் மதத்திலிருப்பதாகச் சொல்லுவார்.பாரசீகம் தான் ஈரான் என்பதில் அவருக்கு பெருமை.அந்தப் பண்பாடு தான் தன் மனைவியிடம் இருப்பதாக பெருமைப்படுவார். அவர்களின் பேரப்பிள்ளை யான மெலோடி மேல் பாலாவுக்கும் பிரியம் அதிகம். வெறுமையாகிப் போன மனதின் வெற்றிடத்தை நிரப்பி இனிமையைப் பரப்பிய ஐந்து வயது சிறுமியான அவள் பாலா என்று உரிமையுடன் அவர் மடியில் அமர்வதும் விளையாடுவதும் வழக்கம். அன்றும் அவள் ஹுசெயினுடன் வந்திருந்தாள்.அரீனா ஏதோ உணவு கொடுத்து அனுப்பியிருந்தாள். மெலோடி பாலாவின் அருகில் அமர்ந்து 'ஊசி போட்டாங்களா பாலா? வலிக்குதா?'தலையை நீவிவிட்டு முத்தம்கொடுத்தாள். 'எப்ப வீட்டுக்கு வருவாய்?' என்று கேட்டவண்ணம் தான் கொண்டு வந்திருந்த ஒரு தின்பண்டத்தை ஊட்டிவிட்டாள். அவள் அன்பு பாலாவை நெகிழச் செய்தது.அவளது மழலை ஆங்கிலம் பாலாவுக்கு மிகவும் பிடிக்கும்.

கையில் சுமணாவின் போட்டோவைப் பார்த்த ஹுசெயின் ஆதரவாக அவர் கரம்பற்றி சுமணாவின் போன் நம்பர் தெரிந்தால் தான் தொடர்பு ஏற்படுத்துவதாகச் சொன்னார்.'தாங்யூ ஹ_செயின் அவளைப் பற்றிக் கொஞ்ச நேரம் கதைப்பமா?நேரமிருக்கா?இவ்வளவு காலமும் சொல் லாத கதைகளேல்லாம் இப்ப சொல்ல வேணும் போலிருக்கு'என்றார். மெதுவாக எழும்பி உட்கார்ந்தவர்'அன்றைக்கு வங்கியிலிருந்து வந்த நேரத்திலிருந்து தலைவலி தாங்க முடியாமல் தலையைப் பிடித்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்திருந்தேன்.ஒரு

கிழமையாக என்ன செய்கிறதென்று ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தவித்தபடியிருந்தேன். அந்தக் காலத்திலை இப்பிடி போன் வசதியுமில்லை.கவலையை சும ணாவுடன் பகிரவும் முடியேலை.அம்மாவுடன் என் தங்கையும் சேர்ந்து கொண்டு என்னை நச்சரித்தபடி இருந்தா.தம்பி சந்திரன் மட்டும் 'உன்னுடைய பயணத்தில் உன்னுடன் யார் பயணிக்க வேண்டுமென்று நீ தான் தீர்மானிக்க வேண்டும்.இப்ப சரியான முடிவெடுக்கத் தவறினால் நீதான் பிறகு வேதனைப்பட வேண்டி வரும.;நான் சுமணாவைக் கூட்டி வாறன்.கச்சேரியிலை போய் ரிஜிஸ்ரர் பண்ணீற்று வீட்டை கூட்டி வா.பிறகு ஒன்றும் செய்யேலாது.முதல் கத்துவினம்.பிறகு சரியாயிடும். நான் சப்போட்டுக்கு நிற்பன்'என்றான். எனக்குத்தான் துணிவாக முடிவு எடுக்க முடியேல்லை.கொஞ்ச நாளாய் வருத்தமாயிருந்த அம்மா அன் றைக்கு என்னைக் கூப்பிட்டு 'நான் கன நாள் இருக்கமாட்டன்.உன்ரை கல்யாணத்தைப் பார்த்திட்டு செத்தால் நிம்மதியாய் போவன்.தங்கச்சி காட்டுற பிள்ளையைச் செய்கிறனென்று சத்தியம் செய்து தா'என்று ஒரேபிடியாக நின்றா.தங்கையும் சாகிற நேரத்திலை கேட்கிறதைக் கூடவா செய்ய மாட்டாய்.நீயெல்லாம் ஒரு மகனா?' கேட்கவும் ஒரு வேகத்துடன்'சரியம்மா.யாரையென்றாலும் செய்கிறன்' என்று சேர்த்து வைத்த கனவுகளெல்லாம் பொசுங்கிப் போக ஒரு வெறுமையுடன் சத்தியம் செய்திட்டன்.அடுத்தநாளே ஒரு வீட்டை கூட்டிப்போய் இது தான் பொம்பிளை.இந்தப்பிள்ளையைக் கல்யாணம் செய்திடு'என்று தங்கையும் அவள் கணவனும் சொல்லி அடுத்த இரண்டு நாளில் கல்யாணம் நடந்து அடுத்த நாள் அம்மா இறந்திட்டா.தன்னோடை என்ரை வாழ்க்கையையும் கொண்டு போயிட்டா'சொல்லிவிட்டு பாலா குலுங்கிக் குலுங்கி அழுதார்.ஹ_செயின் அவரது கையைப் பிடித்தார் ஆதரவாக. மெலோடி ஓடிவந்து கண்ணீரைத் துடைத்து முத்தமிட்டபடி 'சியரப் பாலா' என்றாள்.

ஒரு சில நிமிடங்களுக்குப் பின் தொடர்ந்தார். அதுக்குப்பிறகுதான் நான் ஒரு முட்டாள் வேலை செய்தன். சுமணாவிடம் போய் மன்னிப்பு கேட்ட கையோடு என் இன்னொரு நண்பன் சிறீசேனவிடம் போய் நின்றேன். எங் கள் காதல்கதை தெரிந்தவன்.'சுமணாவை என்னால் கல்யாணம்செய்ய முடியவில்லை.நீ செய்கிறாயா?'என்று கேட்டதுடன் அடுத்தநாளே அவர் கள் இருவருக்கும் கல்யாணம் செய்து வைத்துவிட்டேன்.ஒரு பொருளை தூக்கிக் கொடுப்பதுபோல் சுமணாவின் விருப்பத்தைக் கேட்காமலே பெரிய ஒரு தப்பு செய்திட்டன்.ஏதோ வேகத்திலை செய்திட்டு குற்ற உணர்வில் ஒவ்வொருநாளும் துடித்துக் கொண்டிருந்தேன்.ஆனாலும் என்னால் என் மனைவியை நேசிக்கவோ ஏற்கவோ முடியவில்லை.நான் அவளுடன் பேசியதோ அவளைத் தொட்டதோ கிடையாது. அவளை அவள் அண்ணன் வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டேன். அது தப்பாக எனக்குத் தோன்றவேயில்லை.அப்படியே நான்கு வருடங்கள் ஓடிவிட் டன.எவ்வளவோ முயற்சிகள் செய்தும் அவர்களால் என்னை மாற்ற முடியவில்லை.அவர்கள் என் மேல் விவாகரத்து வழக்கு போட்டபோது தான் தெரிந்தது என் தங்கையும் கணவரும் என் திருமணத்தில் சீதனமாக இருபத்தையாயிரம் பணமும் இனாமாக இருபத்தையாயிரம் பணமும் வாங்கியிருக்கிறார்களென்று.அந்தப் பெண்ணுக்குப் போட்ட நகைகளையும் எடுத்துவிட்டார்களென்பதைக் கேட்டவுடன் தங்கள் தேவைக்காக என் காதலை தூக்கி எறிந்து காலில் போட்டு மிதித்து விட்டார்கள் என்பது வலித்தது.நான் ஏமாற்றப்பட்டதுடன் என் வாழ்க் கையையும் தொலைத்துவிட்டேன் என்பது விளங்கியது.பணம்,நகை என்று எல்லாவற்றையும் கொடுத்து விவாகரத்தும் பெற்றுவிட்டேன்.என் தம்பி பேசினான்.'அவசரப்பட்டு சுமணாவுக்கும் கல்யாணம் செய்து வைச்சிட்டியே. அப்பிடியே விட்டிருந்தாலும் இப்ப செய்திருக்கலாம்'மனம் உடைஞ்சுபோய் வேலையையும் விட்டு கொஞ்சக்காலம் பைத்தியம் போலத்திரிஞ்சன்.பிறகு நாட்டிலை பிரச்சனைகளும் தொடங்க தங்கை, தம்பி என்று எல்லாரும் திசைக்கொரு பக்கம் போக நானும் இங்கை வந்திட்டன்.சுமணாவைப் பிறகு பார்க்கவுமில்லை.சிறீசேனாவுடன் கதைக்கவுமில்லை.

'இப்ப ஒரு ஆசை.சுமணாவுடன் ஒரு வார்த்தையென்றாலும் பேசிற்று சாகவேணுமென்று.அவளிடம் சம்மதம் கேட்காமலேயே தன்னிச்சையாய் நான் எடுத்த முடிவுக்கு அவள் கட்டுப்பட்டதற்கு மன்னிப்பு கேட்க வேணும.;எனக்காக தன்னையே தியாகம் செய்த அற்புதப் பிறவி அவள்.அது மட்டும் போதும்.'அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த ஹுசெயின் 'பாலா!நீங்க நம்பரைத் தாங்கோ.நான் ஏற்பாடு செய்கிறேன்' வாக்குறுதியளித்தார்.நீண்ட பேச்சினால் களைப்புற்ற பாலா கண்களை மூடினார்.தன் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் பாலாவுக்கு உதவ ஹுசெயின் முன்வந்தார்.அவர் பாலாவின் வீட்டுக்குச்சென்று டயரிகளை ஆராய்ந்ததில் பிரேம்லாலின் நம்பரும்,சிறீசேனாவின் நம்பரும் கிடைத் தன.காலத்தை வீணாக்காமல் தொடர்பு கொண்டு பாலாவின் நிலை பற்றிக் கூறியபோது சுமணாவும் மூளையில் ஒரு கட்டியுடன் ஆபத்தான நிலையில் இருப்பதாக கூறினார்கள்.நாட்களை எண்ணிக் கொண்டிருப்ப தாக கூறியபோது ஹ_செயினுக்கு அவர்கள் காதலின் ஆழம் புரிந்து வேதனையாக இருந்தது.அவளது நிலை பற்றி பாலாவிடம் கூறாமல் பேச வைப்பது என்று முடிவு செய்தார்.

அடுத்து வந்த நாட்களில் வாழ்வில் ஒன்றுசேர முடியாது கவலைகளை விழுங்கி வேதனையில் தவித்த இரண்டு உள்ளங்கள் எங்கெங்கோ இருந்து பேசியபடி ஒரே நேரத்தில் உயிரை விட்ட அதிசயம் அங்கு நிகழ்ந்து கொண்டிருந்தது.

உண்மை கலந்த கற்பனை.



பிரான்சிஸ் திமோதிஸ், இலங்கை

# எழுந்திருங்கள் போகலாம் மலைக்கு

மிக நீண்ட பாதங்கள் இருக்கிறது...
வெடித்துப் பிளந்த அதன் ஆழத்தில் குதித்து;
முத்தங்களை பரிசளித்துக்கொண்டு இருக்கிறேன்.
அவர்களோ... என்மீது
அணுகுண்டுகளை வீசுகின்றார்கள்.

மலைக்கு பின்பக்கத்தில்
புழுதி படிந்த ஒரு வரலாறு கிடக்கின்றது...
கூனிக்குறுகிய சிற்சில சொற்கள்
அவ்வரலாற்றை முடமாக்கின.

எண்ணற்ற முறை
என்னை கொலை செய்ய துடித்தார்கள்...
ஆயினும்,
அவர்களின் ஆயுதங்கள் தான் அழிந்தொழிந்து
போயின.

நான்
மலையின் உச்சிவரை ஏறினேன்.
அங்கே;
அவர்களைத் தவிர வேறாரும் இல்லை.

மலையின் உச்சியில்;
நமது நல்லதொரு வாழ்க்கையை
அவர்கள் வாழ்கின்றார்கள்..!
அங்கு அட்டைகள் இல்லை..!
குளவிகளும், சிறுத்தைகளும் கூட இல்லை..!

“மலையின் அடிவார குருவிகளையே
எல்லா ஜந்துக்களும் துண்டாடுவதுண்டு.”

இங்கு பிறக்கும் எல்லா மழைத்துளிகளும்
எறியும் தீப்பிழம்பில் விழுமென்பது விதி...
ஆயினும் நான்;
மலையின் உச்சிவரை ஏறினேன்.
அங்கே...
அவர்களைத் தவிர வேறாரும் இல்லவே இல்லை.


என் கவிதையின் தாகம்
உங்கள் சிந்தையில் புதிதாய் உதிக்க வில்லையா...?
உங்களை யாராலும் கொன்றுவிட முடியாது.!
அடிவாரத்திலிருந்து எழுந்திருங்கள் போகலாம்...
மலையின் உச்சியில் தான்
நமக்கான நல்வாழ்வு இருக்கிறது.

கவிஞர்.புதுகை ஆதீரா (புதுக்கோட்டை)

# நித்தியம்

நித்தியம் என்னை
புலரி முதல் யாமம்வரை இழுத்துச் செல்கிறது
அதன் இறுக்கிய பிடிகளுக்குள் ஏதுமறியாமல்
துவங்கிடும் குறும் பயணம்
நித்தியத்தின் அவசரம்
கண்களுக்கு லாடமும் கால்களுக்குச் சக்கரமும்
தலைக்கு கிரீடமுமாக
பரிசாகிறது நித்தமும்
வாதா மரத்தில் கிளியொன்றின் கிரீச்சொலி கிரீடம்
மறைத்த தடைகள் மீறி
செவிப்பறை மோதி
மடைமாற்றப் பார்க்கிறது
நிமிர்ந்த பொழுது
பால்யத்தின் நினைவுகள் மரத்தில் தொங்கிக்
கொண்டிருக்கிறது
மரநிழலில் சற்று இளைப்பாற நினைக்கும் மனதைக்
கரம் பற்றி இழுக்கும் நித்தியத்தை தவிர்க்க
முடியாது
தவிக்கிறது மனம்
கிட்டிய பொழுதொன்றில்
கிளியின் மொழியே நித்தியத்தின் கவிதையாகிறது.

கார்த்திக் கிருபாகரன் (எ) சீனிவாசன்



# சிறைச்சாலை

பரபரப்பான கூட்டத்தில் வண்டியிலிருந்து இறங்கி கையசைத்தபடியே சிறைச்சாலைக்குள் நுழைந்தார் பெ.அறிவழகன். அவருடன் மறியலில் ஈடுபட்ட பல தொண்டர்கள் கைது செய்யபட்டு, நீதிமன்றத்தால் பதினைந்து நாள் சிறை காவல் விதிக்கபட்டு பின்னால் வந்தார்கள். சிறைக்கு முன் கட்சி தொண்டர்கள் பலர் குவிந்ததால் தள்ளுமுள்ளு ஏற்பட, அறிவழகனை பாதுகாத்து இரண்டு காவலர்கள் பின் தொடர சிறை அலுவலகம் வந்து சேர்ந்தார்கள். பின்னால் பல காவலர்கள் சிறை வாயில் உள்ளே புகுந்து வர நினைக்கும் தொண்டர்களை தடுத்து நிறுத்திய படி, சிறைகதவை அடைத்தார்கள்.

“தலைவா…தலைவா… நீதிக்கு தண்டனையா ?, தலைவரை விடுதலை செய்” என்று வெளியே அவர்கள் கோசமிடுவது, சிறை முழுவதும் எதிரொலித்தது.

“அதான் முந்தானை முடிச்சு படம் தான். பாக்கியராஜ்,ஊர்வசின்னு நடிச்சிருக்காக, என்கூட வேல பாக்குற பழனி, அவர் பொண்டாட்டிய கூட்டிட்டு போயிட்டு வந்தாராம். படம் நல்லா இருக்குன்னு என்கிட்ட சொன்னாரு.அடுத்த வாரம் லீவுக்கு வரேன்ல்ல அப்போ போகலாம்” என்று அலுவலக டெலிபோனில் அவசர அவசரமாக மனைவி மஞ்சுவிடம் கொஞ்சலோடு பேசினார் மூர்த்தி.

வெளியே தொண்டர்கள் கோசமிடும் சத்தம் கேட்க, அது டெலிபோன் வழியாக மறுமுனையில் இருந்த மஞ்சுவிற்கும் கேட்டு, “என்னங்க சத்தம்” என்றாள்.

“அதுவா, எதிர் கட்சி தலைவர் பெ.அ இருக்கார்ல்ல, அவரை கைது பண்ணி பதினைஞ்சு நாள் நம்ம ஜெயில்ல தான் ரிமாண்ட் போட்டிருக்காங்க” என்றார்.

“எதுக்கு கைது பண்ணாங்க ?”

“ஆமா, என்ன பொழப்பு, கவர்மெண்ட் நல்ல திட்டம் ஒண்ணு கொண்டு வந்ததுல்ல, இவுங்க எதிர்கட்சில எதையும் குறை சொல்லி, ஏத்துகாம போராட்டம் பண்ணுறதுதானே இவங்க வேலை. அந்த போராட்டதுல கைதிதாகி வந்துருக்காரு…சரி… சரி… வை… நான் அடுத்த வாரம் ஊருக்கு வராப்ப சொல்லுறேன்” என்றவாறு வேகமாகவும், அதிக நேரம் பேச முடியாத ஏக்கத்தோடும் டெலிபோன் ரிசிவரை கீழே வைத்து, அலுவலகத்தைவிட்டு வெளிவந்தார் மூர்த்தி. வாசலில் நின்றிருந்த போலீஸ்காரன் அடித்த வணக்கத்தை அசிரத்தையாக எதிர்கொண்டான். எதிரில் அறிவழகனை அழைத்தபடி காவலர்கள் வந்து கொண்டிருந்தார்கள். உடன் சிலரை கைது செய்திருந்தார்கள். அவர்கள் வருவதை பார்த்து,

உள்ளே சென்று மீண்டும் இருக்கையில் அமர்ந்தான் மூர்த்தி.

“சார்” என்றபடி இரு காவலாளிகளும் மூர்த்திக்கு முன்பாக வந்து வணக்கம் அடித்தார்கள்.

தலையை அசைத்தபடி, வந்திருப்பவர் யார் என்ன விவரம் எல்லாம் தெரியும். இருந்தாலும் சிறை லெஜரில் எழுதுவதற்காக, அவரை ஏறெடுத்து பார்த்து, “பெயர் சொல்லுங்க” என்றார்.

அசட்டு சிரிப்பு சிரித்தபடியே, “பெ.அறிவழகன் தமிழ்வேலன்” என்றார்.

சற்று நிமிர்ந்து பார்த்து, “ஐய்யா…உங்க நிஜப் பெயரை சொல்லுங்க” என்றார் மூர்த்தி.

“ஏன் தமிழ்நாட்டிக்கே தெரிந்த பேரு போதாதா ?” என்று நக்கலாக சிரித்தார்.

“ஐய்யா, உங்க கட்சியும், அதை சார்ந்தவங்களும் கூப்டுற பெயர் இங்க தேவையில்ல. அரசாங்க பதிவேட்டில் நிஜப் பெயரை தான் குறிப்பிடனும். பலமுறை வந்து போற உங்களுக்கு தெரியாதா ?” என்றார் மூர்த்தி.

“அடடே, அடிக்கடி நான் வந்து போறவன் தானே, என்னோட பேரு தெரியலைன்னு சொல்லுறீங்க. சிறைக்குள்ளும் நம் பெயரை நிலைநாட்டனும் போல” என்று அறிவழகன் சொல்ல, உடன் இருந்தவர்களும் சிரிக்க, மூர்த்திக்கு சற்று எரிச்சலை தந்தது.

“ஐய்யா, ஞாபகம் வச்சிருக்குற அளவுக்கு நீங்க பெருந்தலைவர் இல்லையே. அதனால பெயரை சொல்லுங்க” என்று கோபமாக மூர்த்தி சொல்ல,

“யோவ்…யாரு நீ ?, உன் வயசென்னா ?சின்ன பய நீ, நாட்டோட எதிர்கட்சி தலைவருக்கு மரியாத குடுக்க தெரியல. வயசு வித்தியாசம் இல்லாம, உட்காந்து பேசுற. அவருக்கும் உட்கார நாற்காலி போடல” என்றபடி பின் கைதாகி நின்ற தொண்டர்கள் கோபத்தில் மூர்த்தியை திட்டினார்கள்.

மேஜையை ஒரு தட்டு தட்டி, “சைலண்ட்” என்றான். சட்டென்று அந்த இடமே அமைதியானது.

“என்ன எதிர்கட்சி....?, ஆளுங்கட்சி ?, ஜெயிலுக்குள்ள வந்துட்டா, எல்லாம் அக்கியூஸ்ட் தான்” என்று தொண்டர்களை பார்த்து சத்தமிட்டு, அறிவழகனை பார்த்து முறைத்தபடியே, “பேரை சொல்லுங்க” என்றான்.

கோபத்தை மனதில் வைத்து கொண்டு, முகத்தில் காட்டாமல் மெல்லிய சிரிப்புடன், “தட்சிணா மூர்த்தி பொம்மளு “ என்றார்.

அறிவழகன், உடன் இருந்த தொண்டர்களிடம் மற்ற தகவல்களை எல்லாம் குறித்து கொண்டிருக்க, பத்து நிமிடத்திற்கு மேலே தன்னை நிற்க வைப்பது அறிவழகனுக்கு அவமரியாதையாகவே இருந்தது. சிறை உள்ளே காவலர்கள் பின் தொடர பக்கத்து அறைக்கு அழைத்து கொண்டு போனான். அந்த அறையில் சுவற்றில் சிறு சிறு லாக்கர்கள் இருந்தது. அங்கே கைதாகி வருபவர்கள் கொண்டு வரும் பொருட்களை, உடைகளை அங்கே உள்ள லாக்கரில் பத்திரபடுத்தி வைத்துவிட்டு கைதி உடை மாற்றி சிறையில் அடைப்பார்கள்.

அங்கே தொண்டர்களுக்கு கைதி உடை கொடுக்கபட்டது. தனக்கு கைதி உடை தரபடவில்லை என்பதை கவனித்த அறிவழகன் மூர்த்தியிடம், “எனக்கும் கைதி உடை கொடுங்க” என்றார்.

“இல்லை ஐய்யா, நீங்க உங்க உடையிலே இருங்க” என்றான்.

“ஏன் எனக்கு கைதி உடை இல்லை ?”

“பரவாயில்லை. எதிர்கட்சி தலைவருக்கு பதினைந்து நாள் காவல் வழக்கு தானே!, நீங்க உங்க உடையிலே இருங்க “ என்று தனிந்த குரலில் மூர்த்தி சொல்ல, “பதினைந்து நாள் காவலா இருந்தாலும், நான் கைதி தான். சிறைக்குள்ள எதிர்கட்சி தலைவர், ஆளுங்கட்சி தலைவர்ன்னு வித்தியாசம் இருக்காது. எல்லாம் ஒன்னு தான். நீங்க கைதி உடையே கொடுங்க” என அறிவழகன் நக்கலாக பேச, சிரித்தவாரே,”அவருக்கும் கைதி டிரஸ் குடுங்க” என்று வார்டனிடம் உத்தரவிட்டான் மூர்த்தி.

உடையை வாங்கி அணிந்து கொண்டு மூர்த்தி முன் வந்து நின்று, “யார் என்னைய மறந்தாலும், நீங்க என்னைய மறக்கவே மாட்டீங்க” என்றவாறு சொல்லி உள்ளே சென்றார் அறிவழகன்.

“ஆமா, உங்கள ஞாபகம் வச்சிருக்களவுக்கு எனக்கு என்ன மந்திரி பதவியா குடுக்க போறீங்க?” என்று சிரித்தவாறே அலுவலகம் வந்தான் மூர்த்தி.

காதல் மனைவியின் போட்டோவை பர்சிலிருந்து எடுத்து பார்த்தான். அந்த சில நொடிகள் மனம் வேறெங்கோ அலை பாய்ந்தது. தினம் தினம் பார்க்கும் கைதிகளின் வெட்டு முகம், சிராய்பு முகம், தலும்பு முகம் என பலவற்றை பார்த்து, பார்த்து பழகிய அவனுக்கு கொளுத்தும் வெயிலில் லேசான தென்றல் காற்று வீசிய உணர்வு இருந்தது.

மறுநாள் ஜெயிலே பரபரப்பானது. சிறையில் இருக்கும் தலைவர் அறிவழகனை பார்க்க வந்த கட்சி உறுப்பினர்கள் கோஷம் எழுப்ப, ஒன்றும் புரியாமல் இருந்தது. சிறையில் இருந்த சிலரும் கோஷம் போட,

மனு போட்டு கைதிகளை பார்க்க வந்த மக்களும் சிலர் கோஷங்களை எழுப்பினர். ‘எதற்காக சத்தம், போடுறாங்க’ என்று அலுவலகத்தில் இருந்த மூர்த்தி கவனித்தார். அப்போது தான் அவருக்கு புரிந்தது, தலைவருக்கு கைதி உடை கொடுத்தது தான் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது என்று.

உடனே அவரிடம் சென்று, “ஐய்யா, நீங்க உங்க உடையே மாத்திக்கோங்க. நீங்க கைதி உடையில இருக்கது தான் பெரும் பிரச்சனையா இருக்கு. உங்கள பார்க்க வர்றவங்கதான் கோஷம் போடுறாங்க. அதனால மத்த கைதிகள பார்க்க வரவங்களுக்கு சிரமத்த குடுக்குது. எங்களுக்கும் சிரமமா இருக்கு” என்று சொல்ல, “இல்ல நாளைக்கு பாருங்க” என்றார்.

மூர்த்திக்கு அது பெரும் எரிச்சலாகவே இருந்தது. “சார், இத பேசாம, நம்ம சுப்பீரியர்கிட்ட சொல்லிடலாம்” என்றார் பழனி.

“என்ன ஆகிற போகுது. விடு பாத்துக்கலாம்” என்று மூர்த்தி அது கண்டு கொள்ளாமலே இருந்தார். அன்று அறிவழகனை பார்க்க வந்த அனைவரும் கொந்தளித்து கத்த, சிறைக்குள்ளே கோஷம் எழுப்ப, அன்று முழுவதும் சிறை பரபரப்பாகவே இருந்து கொண்டிருந்தது.

மறுநாள் காலை ஏழு முப்பதுக்கு முதல்வர் அலுவலகத்தில் இருந்து, நேரடியாக சிறை அலுவலகத்திற்கு அழைப்பு வந்தது. ரிசிவரை காதில் வைத்த பழனிக்கு, எதிரில் பேசியது யாரென்று கேட்டவுடன் அதிர்ந்து, மூர்த்தியை அழைத்து, “சார், சி எம் ஐய்யா, பேசுறாரு” என்றவுடன் சிறை அலுவலகமே அதிர்ந்து போனது. பதட்டத்துடன், ரீசிவரை காதில் வைத்து, “ஐய்யா, வணக்கம்” என்று பவ்யமாக பேசினான் மூர்த்தி.

“உனக்கெல்லாம் அறிவில்ல ?, அவர் எதிர்க்கட்சித் தலைவர். அவருக்கு போய் கைதி டிரஸ் குடுத்துருக்க. சரி, குடுத்தாலும் பரவாயில்ல, அதையும் மீடியா வந்து போட்டோ எடுக்குற வரைக்கும் சமையல் வேலை எதுவும் பார்த்துட்டு இருந்தீயா ?, என்று அனல் வீசுகின்ற அளவுக்கு திட்டி தீர்த்தார்.

“ ஐய்யா, நான் கொடுக்கல. நான் அவரை அவர் உடையிலே இருக்க தான் சொன்னேன். ஆனா அவர்தான்

கேட்காமல் கைதி உடைய வாங்கி போட்டுகிட்டாரு'' என்று கலங்கி போய் பதிலளித்தார் மூர்த்தி.

''யோவ், உனக்கு அறிவு வேண்டாம் நீ கொடுக்காம இருந்திருக்கணும். இப்ப நாட்டுல பெரும் பிரச்சினையாகிருச்சு. அங்கங்க போராட்டம் வேற... உன்னைய ஒரு மாசம் சஸ்பெண்ட் பண்ணாதான் சரிபட்டு வரும்'' என்று ஆவேசமாக பேச, ''ஐய்யா, ஐய்யா.... அப்படி எதுவும் பண்ணாதீங்க'' என்று மூர்த்தி கெஞ்சுவதற்குள் தொலைபேசி அழைப்பை துண்டித்தார் முதல்வர்.

வேலைக்கு வந்து இரண்டு வருஷம் கூட முடியல. அதுக்குள்ள தற்காலிக பணிநீக்கம்ன்னா! அது அடுத்தடுத்த வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தும். அடுத்த பதவி உயர்வுக்கும் சிக்கல் ஏற்படுத்துமே! என்ற மனகுழப்பம், பதட்டமும் மூர்த்திக்கு அதிகமாக வந்தது.

அன்றைய தேதிக்கு வந்த அனைத்து முக்கிய செய்தித்தாள்களிலும் முதல் பக்க தலைப்பு செய்தியே, ''நீதிக்கு தண்டனை'' என்ற தலைப்பில் கைதி உடையில் தலைவர் அறிவழகன் இருப்பது போன்ற புகைபடத்துடன் வந்திருந்தது. அதுவும் ''தமிழ்சிங்கம் சிறையில் அடைத்து காவலர்களால் சித்திரவதை'' என்று ஏற்ற இறக்கமாக பத்திரிக்கைகள் பக்கம் பக்கமாக கட்டுரைகளை எழுதி தள்ளியிருந்தார்கள். இதன் விளைவுதான் நாட்டில் அவர்கள் கட்சி உறுப்பினர்களின் போராட்டம்.

செய்திதாளை வாசிக்க வாசிக்க மூர்த்திக்கு உடம்பு வியர்த்து, ஒரு நிமிடம் தலை சுற்றி போனது.

அவர் கைதி உடையில் இருப்பது போன்று போட்டோ எப்படி, சிறைக்குள் கேமரா எடுத்து வர அனுமதி இல்லையே எப்படி அவர்கள் வந்து கேமராவில் போட்டோ எடுத்திருப்பார்கள் என்ற சந்தேகமும் மூர்த்திக்கு வந்தது. ''கேமரா யார் கொண்டு வந்து போட்டோ எடுத்தது. அனுமதியில்லாம கேமரா எப்படி கொண்டு வந்தாங்க. நீங்க சோதனை போட்டீங்களா ?, இல்ல காசு வாங்கிட்டு உள்ள விட்டீங்களா ?'' என்று வேலை பார்க்கும் அதிகாரிகள்,உடன் இருந்த அதிகாரிகள், தனக்கு கீழ் பணிபுரியும் வார்டன் என்று,

அனைவரிடமும் கேள்வி கேட்டான் மூர்த்தி. எந்த பத்திரிகையாளர் உள்ளே வந்து போட்டோ எடுத்தார் என்று யாருக்கும் தெரியவில்லை.

மெல்ல அறிவழகனிடமே போய் நின்றான். அறையின் உள்ளே கண்டும் காணாதது போல இருந்தார் அறிவழகன். ''ஐய்யா, காலையில செய்திதாள் பார்த்தீங்களா ?'' என்றான் மூர்த்தி

''ம்....வாசிச்சேன்'' என்றார்.

'' நேத்து நீங்க கைதி உடையில இருந்ததை உங்கள பார்க்க வந்த கட்சிகாரங்க பார்த்து அது இப்ப பிரச்சினை ஆகிடுச்சு. அத வேற யாரோ போட்டோ எடுத்து பத்திரிகையில போட்டு, அதுகாக முதல்வரே எனக்கு டெலிபோன்ல பேசி, திட்டி ஒரு மாசம் சஸ்பெண்ட் பண்ணிடாங்க. எல்லாம் உங்களால தான். அப்பவே நீங்க உங்க உடையிலே இருந்திருக்கலாமே?'' என்றான்.

''எரிமலை வெடிக்கும் போது அந்த அக்னி குழம்பில் சிறு சிறு செடிகள் கருகுவது இயல்பு தானே'' என்று நமட்டு சிரிப்பில் சொன்னார்.

''எப்படி தான் உங்கள் புகைப்படம் வெளியே சென்றது. கேமிரா கொண்டு வர வாய்ப்பில்ல.ஆனால் உங்க படம் பத்திரிகையில் எப்படிங்க'' என்றான் மூர்த்தி.

''யாராவது மறைச்சு வச்சு எடுத்திருக்கலாம். நீங்கதான் விழிப்பா இருக்கனும். இன்னும் முப்பதைந்து, நாற்பது வருஷம் கழிச்சு. 2025 காலகட்டத்தில் சின்ன ரக கேமிரா கூட வரும். அதெல்லாம் ஆச்சரியமில்ல'' என்றார்.

மனம் சிதைந்து, உருட்டல் மிரட்டல் அலட்சியம் இல்லாம் கேமிரா வந்ததற்கான காரணம் புரியாமல் திரும்ப திரும்ப மூர்த்தி கேட்டான். அறிவழகன் சிறைக்கு வந்த போது, இவனின் அதட்டல் குரல் தற்போது இவரின் அரசியல் விளையாட்டில் தளர்ந்து, ஓடுங்கி கெஞ்சுவது போல் உணர்ந்த அறிவழகன், ''பத்திரிகையில் வந்த புகைப்படம் நாங்கள் கட்சி அலுவலகத்திலேயே கைதி உடை அணிந்து எடுத்துக் கொண்ட போட்டோ சூட் அது. இது போன்ற சமயங்களில் மட்டும் வெளியாகும்'' என்று அறிவழகன் சொன்னதும், ஒரு நிமிடம் அரண்டு போய் நின்றான். கோபமும் வந்தது.


அப்போது முதல் சந்திப்பில் அவர் கூறிய வார்த்தைகள் அவன் நினைவில் வந்தது, ''யார் என்னைய மறந்தாலும், நீங்க என்னைய மறக்கவே மாட்டீங்க'' என்று.

ஆனால் 'இப்போது இதை யாரிடம் தெரியபடுத்த முடியும். உயர் அதிகாரி பலர் அறிவழகனின் அடியாள் மாதிரிதான்' என்று நினைத்தவாறே அலுவலகம் வந்தான்.

தற்காலிக பணி நீக்க உத்தரவு மூர்த்திக்கு வந்து சேர்ந்தது. அங்கிருந்து கிளம்பும்போது, சற்று தொலைவில் அறிவழகன் தன்னை பார்த்து, ''சென்று வா'' என்று புன்னகைத்து கையசைப்பது போல தோன்றியது. ஆனால் அது நிஜமல்ல. மனம் முழுக்க அவரை நினைத்து கொண்டு கோபத்தில் வெம்பி கிடப்பதால், அது 'எல்லாம் கற்பனையே' என்றவாறு புறப்பட்டான்.

Dr ஜலீலா முஸம்மில், ஏறாவூர், இலங்கை

# ஹைக்கூ கவிதைகள்



பாயும் காட்டாறு
கெட்டியாக பிடித்தபடி
சாய்ந்திருக்கும் நாணல்

◎

ஆழ்ந்த உறக்கம்
பிரிக்க முடியவில்லை
குழந்தையிடம் பொம்மையை

◎

மனிதர்களிடம் வந்ததும்
மதம் பிடிக்கிறது
காட்டு யானைக்கு

◎

இறைவனைத் தொழுது
பின் நிமிர்கிறதோ?
முளைக்கும் விதை

◎

பூனைக் கால்கள்
மெதுவாக நடக்கும்
அம்மா குழந்தை உறங்கியதும்

◎

நகரக் குடிபெயர்வு
லாரியில் தூக்கிச் செல்லப்படும்
கிராமத்து வீடு

◎

கையில் அலைபேசி
அடிக்கடி கேட்கிறது
அம்மாவின் அதட்டல்

◎

பிரியாத இணையர்
பிரித்து விடுகிறது
நடுவில் உறங்கும் குழந்தை

குழி வெட்டி மூடினேன்
மலர்ந்து விரிகிறது
பூவோடு செடி

◎

குன்றின் உச்சி
மெதுவாகத் தொட்டு விடுகிறது
பனை மர நிழல்

தில்லானா (மு. மோகனலட்சுமி)

# கானல் நீர் வாழ்க்கை

உறங்காமல் விழித்துப் படித்தேன்
பட்டங்கள் தூரத்துக் கானல் நீர்;
வேலைக்காக உழைத்தேன்
வேலையும் கானல் நீர்;
கானல் நீர்க் கடலில் கப்பல்
விட்டுப் பயணம்
தூரத்துப் பச்சையும் கானல்நீர்.

உருகி உருகிப் பேசிய வாய்கள்
உருக்குலைய வைத்த
உயிரான நட்புகள்
உண்மையில் கானல் நீர்.

அன்பும் ஆதரவும் நீட்டிய
உறவுகளின் எதிர்பார்ப்புகள்
பெற்றோரின் பாசக் கனவுகள்
நம்பியவர்களின் ஆசைகள்
பேசாத மௌனங்கள்
உறவுகளும் கானல்நீர்.

இதயத்தின் உள்ளே
ஒரு காதல் குரல்.
கண்ணில் தெரிந்த உருவம்
விழிகள் சொன்ன கவிதையில்
பார்த்தது என் கண் செய்த குற்றமா
கவிதை பாடிய உன் கண்ணின் குற்றம்
விழித்துப் பார்த்தேன் முன்னால்
காதல் கானல் நீர்.
மரங்களை வெட்டி
நிலமாக்கிப் பயிரிட்டு
விளைச்சலுக்கு ஏங்கி,
மரத்தைக் கொன்ற பாவம்
மழை கானல் நீராகியது.

ஆற்றுக்குக் கரையுண்டு
கவிதைக்கு ராகம் உண்டு
வாழ்க்கைக்கு நம்பிக்கை யுண்டு
அது கானல் நீராகாது.

கிரேஸி மேரி.அ, திருச்சிராப்பள்ளி.

எதிர்காலம் நோக்கிய திட்டமிடலில் நிகழ்காலம்
காணாமல் போகிறது.

நாளைய கனவுகளில் இன்றைய கனவு வினாவாகி
நிற்கிறது.

என்ன செய்யலாம் என்பதிலேயே என்ன
செய்கின்றோம் என்பது தேங்கி விடுகிறது.

சிக்கலில் சிக்காமல் இருக்க சிந்திப்பதே சிக்கலாகி
சிக்கிக் கொள்கிறது.

உந்தி முந்தும் எண்ணங்களும் முடியுமா என்று
ஏக்கமுற்று நிற்கிறது.

வாழப் பிறந்தோம் என்பது ஆளப்பிறந்தோம் என்றே
பரிணமித்து பந்தாடுகின்றன .....
நீயா நானா என்ற தர்க்கத்தில் நீயும் நானும்
உம்மைத்தொகைகளாகமாறுகின்றன....
இலக்கணப் பிழை வாழ்வின் இலக்கில்
பிழையென்றே பொருள்...

சிபாரிசுகள் இன்றி இனி சிகை திருத்தம் கூட
நடைபெறாது போல...
மனிதா!
வாழப் பிறந்தவன் நீ வாழ்க்கையை ரசிக்க
பிறந்தவன் நீ இயற்கையை ரசி உன்னை நேசி
உலகை கண்டு வியப்பு கொள்
உயிர்கள் எல்லாம் உறவே.
என கடந்து போ...
கடந்து செல்வதில் தானே ஆனந்தம்... கல்லாகி
கிடப்பதில் பெருமிதம் உண்டோ?


மகிழ்ச்சியே வாழ்க்கையின் அடிப்படை.
மகிழ்வித்து மகிழ்

–முனைவர் சு.சோமசுந்தரி,

ஆய்வறிஞர், மதுரை



# நவீன இலக்கிய உலகில் பாரதிசந்திரன்



**செ.** சு.நா.சந்திரசேகரன் என்றழைக்கப்படும் பேராசிரியர் சந்திரசேகரன் அவர்கள் சென்னையில் உள்ள வேல்டெக் ரங்கா சங்கு கலைக்கல்லூரியில் உதவிப்பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர். பாரதிசந்திரன் என்ற புனைபெயரில் இதழ்களில் எழுதி வருகிறார்.

மிகச் சிறந்த ஆய்வாளர், கவிஞர், விமர்சனக் கட்டுரையாளர், இதழாசிரியர், பேச்சாளர் என பன்முகத் திறமைகள் பெற்றவர். நவீன இலக்கியங்களில் மிகுந்த ஆர்வமுடையவர். சிற்றிதழ்களின் மேல் கொண்ட ஆர்வத்தால் தமிழ்ச் சிற்றிதழ்கள் குறித்து ஆய்வுசெய்து முனைவர் பட்டம் பெற்றவர்.

தொடர்ந்து தனது வாசிப்பு அனுபவத்தாலும் ஆய்வு அனுபவத்தாலும் நவீன இலக்கிய உலகில் தனக்கெனத் தனிமுத்திரை பதித்தவர். அமெரிக்காவின் உலகத் தமிழ்க் கூட்டமைப்பின் இணைச்செயலாளராகப் பொறுப்பேற்றுச் செயல்பட்டு வருகிறார். தாழை.இரா.உதயநேசன் அவர்களின் ‘முத்தமிழ்நேசன்’ இதழினுடைய ஆசிரியராகப் பொறுப்பேற்றுத் தன் பணியைத் திறம்படச் செய்து வருகிறார். அமெரிக்க முத்தமிழ் பல்கலைக்கழகத்தின் பதிவாளராகவும் செயல்பட்டு வருகிறார். அமெரிக்க உலக முத்தமிழ் தொலைக்காட்சியிலும் இலக்கியம் சார்ந்த நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கி வருகிறார். இனிது, காற்றுவெளி உள்ளிட்ட ஏராளமான இணைய மின்னிதழ்களில் தனது கவிதைகளையும் விமர்சனக்கட்டுரைகளையும் எழுதி வருபவர். தமிழில் சிறந்த இணையதளங்கள், குறும்படங்கள், தமிழில் மறைந்து போனவைகள் ஆகிய தொடர்கள் இனிது மின்னிதழில் வந்துள்ளன. ஆன்மிகம், திரைவிமர்சனம், இலக்கியத் திறனாய்வு, கவிதை, சிறுகதை என பலதரப்பட்டவற்றிலும் ஆழங்கால்பட்ட திறனுடையவர். இவரது யாரோ மனிதர்களாம் தலைப்பிலான கவிதையில்,

“நாய்களுக்கும் கூட
வீதிகள் சொந்தம்- அதில்
மனிதர்கள் குரைக்கிறார்கள்
நாக்குத் தொங்க”

என்ற வரிகள் ஒரு புதிய பார்வையைத் தருகிறது. இவரது புதிய மனிதன் தலைப்பிலான கீற்று இணையப்பக்கத்தில் வந்த கவிதை அற்புதமானது. கவிதையில் படிமத்தையும் குறியீடுகளையும் கையாளும் லாவகம் சிறப்பானது.

“சிலந்திவலை பின்னிய
செவிதேடி அலைகிறது என் வார்த்தைப் பூச்சி...
தின்னட்டும்...
கக்கி வாந்தி எடுப்பதைக் காட்டிலும்
இது எனக்கானது
என்னைப் பிடித்துத் தின்னட்டும்”

என்ற வரிகள் சிறப்பானவை. மிக ஆழமான கவிதைகள் இவருடையது. இறைவன் இருக்கின்றானா? என்ற தலைப்பிலான இவரது கவிதையில்,

“எல்லாம் வல்லவன் வீற்றிருக்கும்
வாசலில் வறுமையாய்...
எத்தனையோ தாய்கள்...!
இருப்பதைப் பார்க்கும்போது...
இறைவன் இருக்கின்றானா?
என்றுதான் கேட்கவேண்டும்...!


என்ற கவிதை வரிகள் ஆழமான சமூகநீதியைப் பறைசாற்றுகின்றன.

எளிமையான நடையிலும் ஆழமான நவீன உத்திகளைக் கையாண்டு, தனது எண்ணங்களை அறுதியிட்டுக் கட்டுரைகள் படைப்பதில் வல்லவர். 400க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார். இடைவிடாத இலக்கியப் பணியில் இவரது ஆற்றல் என்பது வியத்தலுக்கும் போற்றுதலுக்கும் உரியது. ஒன்பது நூல்களை எழுதியுள்ளார். பாடமும் பாயாசமும் என்ற சிறுகதை ஆன்மீகம் தொடர்பான மிகச்சிறப்பான தத்துவ விசாரணை என அறுதியிடலாம்.

இவரது படைப்புத்திறனும் ஏற்புக்கோட்பாடும் என்னும் கட்டுரை நூல் பொதிகை மின்னல் நல்லிலக்கிய அமைப்பின் சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்றது. நார்த்தாமலை சிவன்கோயில்களின் அற்புதங்கள், தமிழ்ச் சிற்றிதழ்களின் நவீன படைப்புலகம், படைப்புத்திறனும் ஏற்புக்கோட்பாடும் உள்ளிட்ட ஒன்பது நூல்களை எழுதியுள்ளார். இவரது பணிகளுக்காக ஏராளமான விருதுகளையும் பெற்றுள்ளார். வாழ்நாள் சாதனையாளர் விருது, தமிழ்ச் செம்மல் விருது உள்ளிட்ட விருதுகள் இவரது பணிகளுக்கு மகுடம் சூட்டின.

பேராசிரியராக இருந்தபோதும் இடைவிடாது எழுதிக் கொண்டும் உரையாற்றிக் கொண்டும் சிறந்த படைப்பாளராகவும் பன்முகத் திறமைகள் பெற்ற இவர் தமிழுக்குச் செய்யும் அரும்பணிகள் பாராட்டத்தக்கன எனில் அது மிகையில்லை.

த.சிவபாலு (கனடா)



# அபிராமி அந்தாதி

அபிராமிப்பட்டரால் அம்பிகையின் மீது பாடப்பட்ட பாடல்கள்தான் அபிராமி அந்தாதி எனப்படும் பக்திப் பிரபந்தம். அபிராமிப்பட்டர் அம்பிகையை நேரில் கண்டவர். அவளின் அருளைப் பெற்றுக்கொண்டவர். அவர் அம்மையின் பாடிய பாடல்கள் உண்மையிலேயே கேட்கக் கேட்க இன்பம் பயப்பன. ஒவ்பொரு பாடலும் ஒவ்வொரு வேண்டுதலை முதன்மைப்படுத்தி அவற்றின் வழி கடைத்தேறத்தக்கதாக அமைந்துள்ளன. அவரது விண்ணப்பங்கள் நாம் சாதாரணமாக கடைப்பிடிக்கும் பாணியிலே அமைந்துள்ளன. தன்னை அம்மையின் குழந்தையாக வைத்து பாடியவை. ஒரு பிள்ளை தனக்கு என்ன வேண்டுமானாலும் தாயிடம் தெரிவித்து அவளின்மூலம் தந்தையிடம் பெற்றுக்கொள்ளும் வழக்காறுதான் மனிதப்பிறவியின் வழக்காறு. அதனை எமது சமயம் மனித வாழ்வியலை அடியொற்றிதாக அமைகின்றது என்பதற்தகு அமிராமிப்பட்டரும் விதிவிலக்கல்ல. தனது விண்ணப்பத்தை அன்னையிடம் முறையிடுகின்றார். அந்த விண்ணப்பம் தாயின் கருணையுள்ளத்தில் பதியவைக்கப்பட்ட அருளை பொழியும் இறைவனிடம் சமர்க்கப்படுகின்றன. ஒரு தந்தையிடம் அன்னையின் மூலம் முன்வைக்கும் பாணியிலே இந்தப் பாடல்கள் அமைந்துள்ளன.

அமிராபிப்பட்டர் எடுத்த எடுப்பிலேயே கணபதிக்குக் காப்புக் கட்டுகின்றார். அங்கேயும் தனதுவித்தகத்தைக் காட்டுகின்றார். இறைவனையும் இறைவியையும் முன்னிலைப்படுத்துகின்றார். “தாரமர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை” என ஆரம்பித்து அந்த இறைவனோடும் இறைவியோடும் அமர்ந்திருக்கின்ற கணபதியே நிற்க கட்டுரையே! என விழித்து தொடங்கும் அந்துப் பாடலடிகளின் உட்பொருள் எத்துணை ஆழமான கருத்தைக் கொண்டுள்ளது என்பதனை பொன். சுந்தரலிங்கம் அவர்கிள் குரலிலே கேட்கும்பொது மெய்மறந்து கண்மூடித் தில்லையிலே வீற்றிருக்கும் கருணாகரு மூர்த்தியையும் அவரது பரிவாரத்தையும் நினைவுறுத்து;கின்றன.

1.முதலாவது பாடலில் ஞானமும் கல்வியும் பெற வேண்டுகின்றார். அதாவது யோகத்தின் முதற்படியாக அமைகின்றது.

2.கடவுளை அணுகமுடியாமல் இருப்பவகள் இணைந்துகொள்ள அல்லது பிரிந்தவர் ஒன்றுசேர வேண்டிய விண்ணப்பம் வைக்கப்படுகின்றது.

3வது பாடலில் குடும்பக் கவலை அல்லது கட்டுப்பாடுகளில் இருந்துவிடுபடுவதற்கான விண்ணப்படம். நரகத்திற்கு உறவாகும் மனிதரை விட்டு நீங்க வேண்டுகின்றார். ஆசை அறுக்கும் மார்க்கம் சொல்லப்படுகின்றது.

4.உயர் பதவிகளை அடைய

5. மனக்கவலை தீர

6.மந்திர சித்தி பெற

7.மலையென வரும் துன்பம் பனியென நீங்க

8.பற்றுகள் நீங்கி பக்தி பெருகிட

9. அனைத்தும் வசமாக

10. மோட்ச சாதனம் பெற

11.இல்வாழ்க்கையில் இன்பம் பெற

12. தியானத்தில் நிலைபெற

13.வைராக்கிய நிலை எய்த

14. தலைமை பெற

15. பெருஞ்செல்வமும் பேரின்பமும் பெற

16.முக்காலமும் உணரும் திறன் உண்டாக

17.கன்னிகைகளுக்கு நல்ல வரன் அமைய

18.மரண பயம் நீங்க

19. பேரின்ப நிலையடைய

20. வீடு வாசல் முதலிய செல்வங்கள் உண்டாக

21. அம்பிகையை வழிபடாமல் இருந்த பாவம் தொலைய

22. இனிப் பிறவா நெறி அடைய

23. எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க

.24. நோய்கள் விலக

25. நினைத்த காரியம் நிறைவேற

26. சொல்வாக்கும் செல்வாக்கும் பெருக

27. மனநோய் அகல

28. இம்மை மறுமை இன்பங்கள் அடைய

29. எல்லா சித்திகளும் அடைய

30. அடுத்தடுத்து வரும் துன்பங்கள் நீங்க

31. மறுமையில் இன்பம் உண்டாக

32. துர்மரணம் வராமலிருக்க

33. இறக்கும் நிலையிலும் அம்பிகை நினைவோடு இருக்க

34. சிறந்த நன்செய் நிலங்கள் கிடைக்க

35. திருமணம் நிறைவேற
36. பழைய வினைகள் வலிமை பெற
37. நவமணிகளைப் பெற
38. வேண்டியதை வேண்டியவாறு அடைய
39. கருவிகளைக் கையாளும் வலிமை பெற
40. பூர்வ புண்ணியம் பலன்தர
41. நல்லடியார் நட்புப் பெற
42. உலகினை வசப்படுத்த
43. தீமைகள் ஒழிய
44. பிரிவுணர்ச்சி அகல
45. உலகோர் பழியிலிருந்து விடுபட
46. நல்நடத்தையோடு வாழ
47. யோகநிலை அடைய
48. உடல் பற்று நீங்க
49. மரணத் துன்பம் இல்லாதிருக்க
50. அம்பிகையை நேரில் காண
51. மோகம் நீங்க
52. பெருஞ்செல்வம் அடைய
53. பொய்யுணர்வு நீங்க
54. கடன் தீர
55. மோனநிலை எய்த
56. யாவரையும் வசீகரிக்கும் ஆற்றல் உண்டாக
57. வறுமை ஒழிய
58. மனஅமைதி பெற
59. பிள்ளைகள் நல்லவர்களாக வளர
60. மெய்யுணர்வு பெற
61. மாயையை வெல்ல
62. எத்தகைய அச்சமும் அகல
63. அறிவு தெளிவோடு இருக்க
64. பக்தி பெருக
65. ஆண்மகப்பேறு அடைய
66. கவிஞராக
67. பகைவர்கள் அழிய
68. நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக
69. சகல சௌபாக்கியங்களும் அடைய
70. நுண் கலைகளில் சித்தி பெற
71. மனக்குறைகள் தீர
72. பிறவிப் பிணி தீர
73. குழந்தைப் பேறு உண்டாக
74. தொழிலில் மேன்மை அடைய
75. விதியை வெல்ல
76. தனக்கு உரிமையானதைப் பெற
77. பகை அச்சம் நீங்க
78. சகல செல்வங்களையும் அடைய
79. கட்டுகளில் இருந்து விடுபட
80. பெற்ற மகிழ்ச்சி நிலைத்திட
81. நன்னடத்தை உண்டாக
82. மன ஒருமைப்பாடு அடைய
83. ஏவலர் பலர் உண்டாக
84. சங்கடங்கள் தீர
85. துன்பங்கள் நீங்க
86. ஆயுத பயம் நீங்க
87. செயற்கரிய செய்து புகழ் பெற
88. எப்போதும் அம்பிகை அருள் பெற
89. யோக சித்தி பெற
90. கணவன் மனைவி கருத்து வேற்றுமை நீங்க
91. அரசாங்கச் செயலில் வெற்றி பெற

பொருள்: மின்னலையொத்த மெல்லிய நுண்ணிய இடையைப் பெற்றவளை, விரிந்த சடை முடியையுடைய சிவபெருமான் தழுவிய பொன்னையொத்த பிரகாசமுடைய மெல்லிய தனபாரத்தைப் பெற்றவளை, வேதங்கள் புகழந்து கூறியவாறு வழிபடும் அடியவர்களுக்கு, பல்வகை

இசைக்கருவிகள் முழங்க வெள்ளை யானையின் மேல் ஏறிச் செல்லக் கூடிய இந்திர பதவியை அருள்பவள் அபிராமியன்னையாவாள்.

92. மனநிலை பக்குவமடைய

பதத்தே உருகி, நின்பாதத்திலே மனம் பற்றி, உன்தன்
இதத்தே ஒழுக அடிமைகொண்டாய்; இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன்; அவர் போன வழியும் செல்லேன்;

93. உள்ளத்தில் ஒளி உண்டாக

நகையே இஃதிந்த ஞாலம் எல்லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை; மானே முதுகண்; முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது; நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

94. மனநிலை தூய்மையாக

விரும்பித் தொழும் அடியார், விழிநீர்மல்கி மெய்புளகம்
அரும்பி, ததும்பிய ஆனந்தமாகி; அறிவிழந்து,
சுரும்பிற் களித்து மொழி தடுமாறி, முன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால், அபிராமி சமயம் நன்றே.

95. மன உறுதி பெற

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை; உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்து விட்டேன்; அழியாத குணக்
குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே!

96. எங்கும் பெருமை பெற

கோமள வல்லியை அல்லியம் தாமரைக்கோயில் வைகும்
யாமள வல்லியை, ஏதம் இலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே.

பொருள்: அன்னையாகிய அபிராமவல்லியை, இளமையும் அழகும் பொருந்தியவளும் கொடி போன்றவளுமான கோமளவல்லியை, அழகிய மென்மையான தாமரையைக் கோயிலாகக் கொண்டு வீற்றிருக்கும், குற்றமற்ற யாமளவல்லையை, ஓவியத்திலே எழுதவொண்ணாத எழில்மிக்க திருமேனியுடைய சாமளவல்லியை, சகல கலைகளுக்கும் தலைவியாய் விளங்கும் மயில் போன்றவளை, தம்மால் இயன்ற அளவு தொழும் அடியவர்கள் ஏழுலகங்களையும் ஆட்சி புரியக் கூடிய அதிபர்கள் எனத்தக்க அளவில் வளமான வாழ்வைப் பெறுவர்.

97. புகழும் அறமும் வளர

98. வஞ்சகர் செயல்களிலிருந்து பாதுகாப்பு பெற

99. அருள் உணர்வு வளர

100. அம்பிகையை மனத்தில் காண

குழையைத் தழுவிய ஒன்றை அம்தார் கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்தோளும், கரும்புவில்லும்
விழையப்பொருதிறல்வேரி அம்பாணமும்; வெண்ணகையும்,
உழையப் பொருகண்ணும், நெஞ்சில் எப்போதும் ‹உதிக்கின்றனவே.

பொருள்: குழையும்படி இறுகத் தழுவியபோது எம்பெருமான் சிவபிரானின் திருமார்பினின்றும் பரவிய கொன்றை மலரின் நறுமணம் கமழும் மார்பகத்தையுடைய கொடி போன்ற அபிராமியன்னையின் மூங்கிலையொத்த அழகிய நீண்ட திருத்தோள்களும், கரும்பு வில்லும், ஆணும், பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பக் காரணமாக உள்ள மணம் மிகுந்த அழகிய ஐந்து மலரம்புகளும், வெண் முத்தனைய புன்முறுவலும் மானின் கண்ணையொத்த திருவிழிகளும் எளியவனாகிய அடியேனின் நெஞ்சில் எப்போதும் குடிகொண்டிருக்கின்றன.

101. நூற்பயன்

ஆத்தாளை, எங்கள் அபிராமவல்லியை, அண்டம் எல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத்தாளை, புவிஅடங்காக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும், கரும்பும், அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கு இல்லையே.

பொருள்: எங்கள் தாயை, அபிராமவல்லியை, அனைத்துலகங்களையும் ஈன்றருளியவளை, மாதுளம் பூவையொத்த சிவந்த நிறத்தினளை, உலகங்களையெல்லாம் காத்து ரட்சிப்பவளை, அழகிய நான்கு திருக்கரங்களில் அங்குசம், பாசம், மலர்ப்பாணம், கரும்பு வில் ஆகியனவற்றை ஏந்தியிருப்பவளைத் தொழுபவர்களுக்கு எப்போதும் எந்த ஒரு துன்பமும் நேராது.

நௌஷாத் கான் .லி



# உமா பைத்தியம்

பெண்கள் இந்த நாட்டின் கண்கள் ,பெண்களை தெய்வமாக மதிக்கிறோம் அதனால் தான் ஓடும் நதிகளுக்கு எல்லாம் பெண்களின் பெயரையே சூட்டி இருக்கிறோம் என்று பெருமை பட பேசும் ஆண்களின் நாக்கு உண்மையிலேயே நரம்பு இல்லாதது தான் ...உலகம் போற்றும் இராமபிரான் கூட பத்தினி தெய்வம் சீதையின் மீது சந்தேகப்பட்டவன் தான் ...ஒரு உண்மை சொல்லப் போனால் அந்த சீதா இல்லையேல் அவன் ஊர் போற்றும் ஏக பத்தினி விரதனாக ,அவதார இராமனாக இருந்திருக்க மாட்டான் என்பது தான் நிதர்சனமான உண்மை ...

பொது வெளியில் பெண்களின் பெருமை போற்றும் ஆண் தனிமையில் காமம் கொள்வதற்காக அவள் மீது காதல் கொள்கிறான் ..காமம் தவிர்த்து பார்த்தால் காதல் என்ற ஒன்றை இப்பிரபஞ்சத்தில் கடைசி வரை தேடி கொண்டு தான் இருக்க வேண்டும் ...அப்படி உண்மையிலேயே இப்பிரபஞ்சத்தில் காதல் ஒன்று இருப்பது

உண்மையென்றால் அதில் ஒரு துளி காமம் இல்லாமல் இருப்பது சாத்தியமில்லை ...

முறையான காமம் தவறில்லை ஆனால் உன்னை மூர்க்கத்தனமாக்கும் ,மனசாட்சியே இல்லாத காமம் கொலைக்குற்றத்தை விட மோசமானது ..காமம் பெறும் பெண்களிடத்திலேயே ஊனமுற்றவன் போல வரதட்சணை வாங்கி கொண்டு ஒரு வேலைக்காரியாய்,அடிமையாய் கற்பு நெறி பேசி கொண்டும் ,இதிகாசம் சொல்லி கொண்டும் அவளை வளர விடாமல் செய்து விட்டு எந்த இடுக்கில் எவள் மாட்டுவாள் எவளை தன் காம இச்சைக்கு இரையாக்கலாம் என்று உள்ளூற நினைத்து கொண்டிருக்கும் , அதே சமயத்தில் வெளியே உத்தமன் வேஷம் போடும் எந்த நாதாரிகளுக்கும் உமாவின் வாழக்கை புரிய போவதில்லை ..அழகாய் பிறந்து பாலும் -தேனும் கொடுத்து வளர்க்க பட்டு ,கஸ்தூரி மஞ்சளாலும்-சந்தனத்தாலும் மகாராணி போல குளிக்க வைக்க பட்டவள் காதல் என்ற பெயரில் பாசம் காட்டி பொக்கிஷமான அவள் கற்பை களங்கமாக்கி தன் தேவை முடிந்ததும் டிஸ்யூ பேப்பரை போல அவளை தூக்கியெறிந்ததால் சித்தம் கலங்கி சிதிலமடைந்த ஒரு பெண்ணின் கதை ...புத்தி சுவாதீனம் இல்லாதவளையும் ஆறாம் அறிவோடு உள்ள சில ஆண் வர்க்க தர்தலைகள் தன் வக்கிர புத்திகளையெல்லாம் அவளிடத்தில் தீர்த்த கதை இது....

ஒரு அழகான ஊர் , அது கிராமமும் இல்லை ,நகரமும் இல்லை இரண்டுக்கும் இடைப்பட்ட அதே சமயத்தில் எல்லா வசதிகளும் உள்ளூரிலேயே கிடைக்க கூடிய வகையில் உள்ள ஊர் ,அந்த ஊரில் போலீஸ் ஸ்டேஷன் கிடையாது எல்லாமே பஞ்சாயத்தில் என்ன முடிவு செய்கிறார்களோ அது தான் அங்கு சட்டம் ..

அந்த ஊரில் சிறகுகள் இல்லாத பறவையாய் ,பூக்களை இரசிக்கின்ற பட்டாம்பூச்சியாய் சந்தோசத்துடன் வலம் வந்தாள் உமா , அவளை பார்த்தால் பல்லு போன கிழவனும் கூட கடவுளிடத்தில் இளமை வாங்க வரம் கேட்பான் ,பார்த்த ஆண்கள் எல்லாம் எவனுக்கு இவள் கொடுத்து வைத்திருக்கிறாளோ என ஏக்கப் பெருமூச்சு பொறாமையுடன் விட்டனர் , இந்த உலகை பற்றி எதுவும் அறியாமல் வெள்ளேந்தியாய் சுற்றி திரிந்தாள் உமா .

சீறும் பாம்பை நம்பு சிரிக்கும் பெண்ணை நம்பாதே ,அழகான பெண்களெல்லாம் ஆபத்தானவர்கள் என வீணாய் போன வசனமெல்லாம் ஏதாவது வேலை வெட்டி இல்லாதவன் தான் கண்டு பிடித்து இருப்பான் ஆனால் உண்மையில் பெண்ணாய் பிறந்து விட்டாலே ஆபத்து தான் அதுவும் கொஞ்சம் அழகாய் பிறந்து விட்டால் பேராபத்து ...உமாவோ பேரழகி அவளுடைய வனப்பு பார்ப்பவரையெல்லாம் வியக்க வைத்தது..நிலா முகம் ,சுண்டியிழுக்கும் பார்வை ,சிவந்த உதடு ,தங்க மேனி என அவள் நிஜமாகவே தேவதை தான் ..படைத்த பிரம்மன் ஒரு முறை பூமி வந்து அவளை பார்த்தால் அவனுக்கும் அவள் மீது காதல் வரும் .

உமா பள்ளி படிப்பை முடித்து விட்டு கல்லூரி முதலாமாண்டு படித்து கொண்டிருந்தாள் அதே தெருவில் வசிக்கும் மதனுக்கு அவள் மீது கண்ணு அவளை எப்படியாவது தன் வலையில் வீழ்த்தி விட வேண்டும் என மாதக்கணக்கில் திட்டமிட்டான் அவள் பார்க்கும் போதெல்லாம் நல்ல பையன் மாதிரி ரொம்பவே நடித்தான் ..அவள் செல்லும் வழிகளில் எல்லாம் ஒரு ஹட்ச் நாய் குட்டி போல பின் தொடர்ந்தான்..பருவ வயதில் நல்லது கெட்டது கண்ணுக்கு தெரியாது என்பார்கள் அது நூற்றுக்கு நூறு உண்மைதான் ..கரைத்தார் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்கள் காதல் என்ற பெயரில் அவள் மனசை கலைத்து கற்பை வேட்டையாட நேரம் பார்த்து கொண்டிருந்தான் மதன் ..

அந்த ஊரில் இருக்கும் வரை அவள் கற்பை களவாட முடியாது என்பதை உணர்ந்த அவன் ஒரு திட்டம் போட்டான்

உமா ,நான் படிச்சு முடிச்சு ரொம்ப நாளாச்சு இதுவரைக்கும் இந்த ஊர்ல ஒரு வேலையும் கிடைக்கலை .பெங்களூர்ல என் நண்பன் இருக்கான் ,அவன் எனக்காக நல்ல வேலையா பார்த்து வச்சிருக்கான் நான் அங்கே போய்ட்டா உன்னை பார்க்க முடியாது ,நம்ம காதலையும் உங்க வீட்ல ஒத்துக்க மாட்டாங்க ஏன்னா உங்க அப்பா அம்மாவுக்கு என்னை கண்டாலே பிடிக்காது ,என்னை நம்பி வா உமா உன்னை கண்கலங்காம காலத்துக்கும் சந்தோசமா என் கண் இமை போல வச்சு இருப்பேன் ,என் நண்பன் நமக்காக வீடெல்லாம் பார்த்து வச்சு இருக்கான் ப்ளீஸ் வாடி என்று பாச மழை பொழிந்து பேசினான் ..மகுடிக்கு ஆடும் பாம்பு போல அவன் பேச்சை கேட்டு படிப்பை ,தன்னுடைய வருங்காலத்தை கெடுத்து கொண்டு,தன்னை நம்பி இருந்த அப்பா ,அம்மாவை ஏமாற்றி விட்டு வீட்டை விட்டே ஓடினாள் ...

அவளை அழைத்து சென்ற அவன் திருமணம் என்ற பெயரில் ஒரு கோயிலில் திருட்டு தாலி கட்டி விட்டு பெங்களூர் அழைத்து சென்றான் ..

மதன் உமாவை கல்யாணம் செய்ததே அவள் கற்பை களவாட தானே ,தினம் தினம் அவன் காமப் பசிக்கு அவள் இரையானாள்..அவள் சிவந்த மார்பகளெல்லாம் அவன் கோர பல் பட்டு வெம்பி போனது, அவள் காயப்பட்ட உடலுக்கு மஞ்சளும் -தேங்காய் எண்ணெய்யும் மருந்தாக இருந்தது.

காதல் இருந்தால் காமம் கூட சொர்க்கமாய் இருக்கும், காதல் இல்லாத காமம் வெறும் சுடும் அனல் தரும்

நரகம் தான்..

காமம் தவிர்த்து பார்த்தால் அவள் மீது அவனுக்கு காதல் இல்லாததால் பழகப் பழகப் பாலும் பாலும் ,சுவைக்க ,சுவைக்க இனிக்கும் தேனும் கூட புளிக்க துவங்கியது ..வேலை வெட்டிக்கு போக விருப்பமில்லாத அவன் அவளை தன் நண்பர்களுக்கே கூட்டி கொடுத்து காசு பார்க்க எண்ணினான் ஆனால் அவள் ஒரு போதும் அந்த ஈனச் செயலை செய்ய மாட்டாள் என்பதை அறிந்த அவன் அவள் உண்ணும் உணவில் மயக்கம் மருந்து கொடுத்து மாற்றானுக்கு விருந்தளித்தான் ..சுயநினைவு தெரிந்து எல்லாம் தெரிந்து அவர்களுக்குள் வாக்கு வாதமும் -சண்டையும் ஏற்பட்டது ..கோபத்தில் அவளை கண் மண் தெரியாமல் மிருகத்தனமாய் அடித்தான் ..ஒரு காலத்தில் அவளை கொஞ்சிய கைகள் தான் அவள் உடலை இரணமாக்கியது என்பதை உணர்ந்த அவள் கண்களில் அவளையும் அறியாமல் விழிகளில் விழி நீர் வழிந்தோடியது

இறுதியாய் அவன் அடித்த அடியில் சுவற்றில் அவள் தலை பட்டு மயங்கி விழுந்தாள் பயத்தில் அவள் நெஞ்சில் தலை வைத்து பார்த்தான் மூச்சு இருந்தது ,சிறிது நேரத்திற்கு பிறகு கண் விழித்த அவள் தன்னையே முழுமையாக மறந்திருந்தாள்..

பைத்தியக்காரியான அவளை இனிமேல் இங்கே வைத்திருந்தால் ஒரு பயனும் இல்லை என்பதை உணர்ந்த அவன் அவள் ஊருக்கு போகும் பஸ்ஸில் ஏற்றி விட்டு அவன் வேறொரு பெண்ணுக்கு வலை விரிக்கும் வேலையை பார்க்க நடையை கட்டினான் .

இவள் போகும் ஊர் தான் கடைசி ஸ்டாப் ,இவள் ஊருக்கு வருவதற்கு முன்பே ஒரு ரெண்டு ,மூணு ஸ்டாப்புக்கு முன்னாடியே பேருந்தில் இவளை தவிர யாருமில்லாததால் ஆள் அரவமற்ற பகுதியில் இவள் புத்தி சுவாதீனம் இல்லாதவள் என்பதை உணர்ந்து கொண்டு அந்த டிரைவரும் அந்த கண்டக்டரும் அடக்கி வைத்த காம இச்சைகளை எல்லாம் குழந்தையை மாதிரி உள்ள அவளிடத்தில் தீர்த்து கொண்டனர் ..மனசாட்சியே இல்லாமல் திரும்ப திரும்ப தன் கைகளில் உள்ள மொபைலில் அந்த பலான படங்களை பார்த்து பார்த்து தங்களை கிளர்ச்சி ஏற்றிக்கொண்டு அவள் பெண்ணாய் உருவகப்படுத்தும் உறுப்பில் குருதி வரும் வரை புணர்ந்து விட்டு ஒரு குப்பையை போல ஒரு மரத்தடியில் தூக்கி போட்டு விட்டு சென்றனர் ..

ஒரு நாள் முழுதும் அந்த இடத்திலேயே பிணம் போல கிடந்தாள் மறுநாள் அந்த வழியாக வந்த தள்ளுவண்டி கடை வைத்திருக்கும் பாட்டி இவளை அடையாளம் கண்டு அவள் மீது இரக்கம் கொண்டு அங்கு வந்த மற்ற ஒரு சிலரின் உதவியோடு ஊர் கடைத்தெருவில் கொண்டு வந்து பொது குளியலறையில் குளிக்க வைத்து அவளுக்கு சாப்பிட இட்லியும் வாங்கி கொடுத்து விட்டு சென்றது யாருமற்ற அனாதையாக பகலெல்லாம் கோயில் நடையில் கதியாக கிடந்தாள் ஏனென்றால் இவள் ஊரை விட்டு ஓடவும் அவள் அப்பா அம்மா எல்லாம் அவமானம் தாங்காமல் அந்த ஊரை விட்டே கண் காணாத இடத்துக்கு சென்று விட்டனர் இப்போது அந்த ஊரில் அந்த குடும்பத்தை பற்றி எந்த விபரமும் ஒருத்தருக்கும் தெரியாது .. தான் செய்த தவறால் தானும் தன் குடும்பமும் நிர்கதியான நிலை கூட தெரியாமல் எதுவும் நிலையில்லாத உலகத்தில் எதுவுமில்லாமல் கசங்கி போன குப்பை போல கிடந்தாள் ..அவள் மீது இரக்கப்படுவோர் பாவப்பட்டு ஏதாவது உணவு பொருளை கொடுத்து விட்டு செல்வர் ..ஒரு காலத்தில் சந்தன வாசம் வீசும் அவள் மேனியில் இப்போதெல்லாம் மல-மூத்திரத்தின் துர்நாற்றம் தான் வீசியது ஏனென்றால் அவளுக்கு எதுவும் தெரியாது மலம் வந்தால் அப்படியே கட்டியிருக்கும் ஆடையிலேயே போய் விடுவாள் மூத்திரம் கூட நின்று கொண்டு பள்ளி சிறுவர்களை போல போவாள் அதை கூட காமக் கண் கொண்டு பார்க்கும் கேவலமான மனிதர்களும் இருக்கத் தான் செய்தார்கள் ..

சில வாலிபர்கள் இரவில் சிந்தை கெடும் வகையில் குடித்து விட்டு கோயில் வாசலில் படுத்திருக்கும் உமாவை தூக்கி சென்று வயக்காட்டில் உள்ள பம்பு செட்டில் சோப்பு ஷாம்பு போட்டு அவளை குளிக்க வைத்து புதிய காட்டன் சேலையை அவன் மீது போர்த்தி விட்டு வாசனைக்கு அவள் தலையில் பூவை வைத்து விட்டு போதை வாடையில் கோதையின் பூ வாசத்தில் கிளர்ச்சியுறும் மிருகத்தின் காமப்பசிக்கு வடிகாலாய் அந்த பாவப்பட்ட பைத்தியக்காரி சிக்கியதால் தினம் தினம் மலம் தின்னும் நரன்களுக்கு அவள் பலிகடாயானாள்.

அவள் வாழ்க்கை என்னும் சிறுகதை பொதுவெளிக்கு வந்து தொடர் கதை ஆனதால் எவனோ ஒரு படுபாவி கொடுத்த தீராத நோய்க்கும் ஆளானாள்.தினம் தினம் நரக வேதனையை சொல்ல முடியாத ஊமையின் கனவு போல அனுபவித்து துடித்தாள்

ஒரு நாள் இறுதியாக அந்த பாவப்பட்ட உடலிலிருந்து உயிரும் போனது ..பாலும் தேனும் குடித்து வளர்ந்த உடம்பு அது ,ஜவ்வாதும் ,சந்தனமும் தேய்த்து குளித்த உடம்பு அது ,செல்வச் செழிப்பாக ஒரு மகாராணி போல இருந்தவள் கேட்பாரற்று ஈக்கள் மொய்க்க யாருமற்ற அனாதையாக அவள் பிணம் தெருவில் கிடந்தது ...

கடைசியாக அவளது உடலை குப்பை தொட்டி வண்டியில் போட்டு கொண்டு நகராட்சி ஊழியர்கள் சென்று கொண்டிருந்தனர் அப்போது பெண்கள் நாட்டின் கண்கள் என்ற வாசகத்தோடு பொதுச் சுவர் பிரகாசமாய் காட்சியளித்தது !!

பாவேந்தல் பாலமுனை பாறூக்

# மட்டுநகர் வாவியிலே மீன் பாடுது!

மட்டுநகர் வாவியிலே மீன் பாடுது
மக்கள் தமிழ் பேசுகையில் தேன் பாயுது
பச்சை வயல் பரப்பினிலே நெல்லாடுது
பண்பான வார்த்தைகளில் சொல்லாடுது

கல்லடியோ இயற்கை வளம் காண அழைக்குது
கண்கவரும் காட்சிகளில் உள்ளம் திளைக்குது
இல்லை யெழில் என்பவரார் இந்த மண்ணிலே
இதுசொர்க்கம், ஒளிபரவும் உந்தன் கண்ணிலே

படுவான் கரை அழகைப் பார்த்து மகிழ வா
பழம்பெருமை கோயில்களைக் கண்டு மகிழ வா!
அழகான குளங்களிலே குளித்து மகிழ வா
அகம்பூத்த 'கா" அசையில் பேசி மகிழ வா

எழுவான் கரை எழிலில் இதயம் மகிழ வா
எல்லையிலா ஆழி மகள் அழகை இரசிக்க வா
இறை இல்லம் பல கண்டு இன்பம் கொள்ள வா
ஒருமொழியில் இரு இனத்தின் சிறப்பைக் காண வா!

தோளிலும் "கா" நாவிலும் "கா" சுவைத்து மகிழ வா
தூயமன அன்பினிலே தோய்ந்து மகிழ வா
மீன் பாடும் தேன் நாட்டின் சிறப்பைப் பருக வா
மெல்ல வரும் பூங்காற்றின் சுகத்தில் குளிர வா!



இத்ரீஸ் யாக்கூப்.



# யாரும் யாரும் அல்ல!

மணி இரவு எட்டு இருபது. முக்கத்திலிருந்த கடை ஒன்றில் டீ சாப்பிட்டுவிட்டு நான் திரும்பியபோது எனக்காகவே அதுவரை அங்கே காத்திருந்தது போல் பாட்டி ஒருவர் தயங்கி தயங்கி பஸ் டிக்கெட்டிகிற்கு ஐந்து ரூபாய் குறைகிறதெனவும், கொஞ்சம் உதவினால் நல்லபடியாக தான் ஊர் சென்று சேர்ந்துவிடுவேன் என மருகியவாறுக் கேட்டு நிற்க, அவருடைய தொனியும் கனிவான முகமும், பேச்சும் பார்த்த மாத்திரத்தில் மனதை என்னவோ செய்துவிட்டது!

எவ்வளவு நேரமாக இப்படி நின்றுக் கொண்டிருந்திருக்கிறார் என்று தெரியவில்லையே என நினைத்துக் கொண்டே பாக்கெட்டிலிருந்து இருபது ரூபாய் தாளை எடுத்து நீட்டினேன். அதை சற்றும் எதிர்பாராதவராய், ஏதோ நடக்க கூடாதது நடந்துவிட்டது போல உடலை நடுக்கிக் கொண்டு, 'வேண்டாம் தம்பி! வந்த இடத்தில் எதிர்பாராத விதமாய் செலவழிந்து விட்டது; எனக்கு அஞ்சு ரூபாய் மட்டும் குடுங்க! போதும்!' என கூப்புவது போல வந்த கைகளை உதறிக் கொண்டு வாங்க மறுத்தார்.

பரவாயில்லை எதற்கும் கொஞ்சம் கூடுதலாகவே கையில் வைத்துக் கொள்ளுங்களேன் என நான் வலிந்து திணித்ததை ஒரு கட்டத்தில் மிகுந்த தர்ம சங்கடத்துடன் ஏற்றுக்கொண்டார். எனக்கும் ஒரு மாதிரியாக இருந்தது. இவர் இவ்வளவு யோசிக்கும் அளவிற்கு அவ்வளவு பெரிய உதவி ஒன்றும் நான் செய்துவிடவில்லையே..! என்னுடைய கணக்குப்படி அது இரண்டு டீக்கான காசு அவ்வளவுதான். இவரை காணாமல் இன்னும் கொஞ்ச நேரம் அதே இடத்தில் நின்றிருந்தாலும் தெரிந்தவர்கள் அல்லது நண்பர்கள் யாரேனும் என் கண்ணில் பட்டிருக்க கூடும், அவர்களுக்காக அதே காசோ அல்லது கூடுதலாகவோ செலவும் ஆகியிருக்கலாம்.

"தம்பி மய(ன்) கொஞ்சம் தூரத்துல தள்ளுவண்டியில் சின்ன பழக்கடை போட்ருக்கான். அங்க போயிக் கேட்டிருக்கலாம்தான் ஆனா ஏனோ கொஞ்சம் யோசனையா இருந்திச்சி, அதான் இங்க நிண்ட உங்கட்ட கேட்டேன்.. " என மீண்டும் கூச்சம் கலந்த சங்கடத்தோடு என்னைப் பார்த்தார்.

"பரவால்லங்கம்மா யார்ட்ட வாங்குனா என்ன.." நான் புன்னகைத்தவாறு அவரை சமாதானப்படுத்த முயன்றேன்.

"இல்லங்க தம்பி, இது வெள்ளிக்கிழமை ராவு வேற உங்க குடும்பமும் நல்லாருக்கணும், எங்க குடும்பமும் நல்லாருக்கணும்" என பரபரத்தவாறு, "இத வச்சிக்கிங்கன்னு ஒரு ரூபாய் நாணயமொன்றை பாசத்தோடு கொடுத்தார். பெரிய பரிசொன்றைத் தாங்கி பிடிப்பது போல் இரு கரங்களைச் சேர்த்து குழித்த வண்ணம் நீட்டி, மகிழ்வோடு பெற்றுக்கொண்டேன்.

அதில்தான் அவர் மனம் ஒரு வழியாக சமாதானம் அடைந்திருக்க வேண்டும்; அக்கணம் அவருடைய முகம் அன்னமிட்ட கைகளின் நிறைவை சூடிக்கொண்டிருந்தது! அதுவரை சூழ்ந்திருந்த மனநெருக்கடிகள் யாவும் விலகி, "வர்றேன் தம்பி, நல்லாருப்பிய!" என்று சிரித்த முகமாய் தூரத்தில் பஸ் வரும் வெளிச்சத்தை கவனித்துவிட்டது போல் அதன் நிறுத்தத்தை நோக்கி சற்று வேகமாக நடக்கலானார்.

அந்த இருபது ரூபாயில் டிக்கெட் போக மிச்சத்தை அவர் வேறு யாருக்காவது கொடுக்கலாம், தர்மம் செய்யலாம் அல்லது ஏதேனும் கோயில் உண்டியலில் போட்டுவிட்டு கூட செல்லலாம். அதை அவருக்காக உபயோகித்து கொள்ள வாய்ப்புகள் குறைவு அல்லது அவர் மனம் அதை அனுமதிக்காது. அப்படிதான் என் மனம் சொன்னது.




**சிற்றிதழ் அறிமுகம்**

**வெண்ணிலா**

கிழக்கிலங்கையிலிருந்து கவிதை மஞ்சரியாக வெளிவந்துகொண்டிருக்கும் வெண்ணிலா இதழ் நமது பார்வைக்கு கிட்டியது.

அழகிய வடிவமைப்பு.தேர்ந்தெடுத்த படைப்புக்கள். கவிஞர்.எஸ்.ஏ.கப்பார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இதழை பாராட்டி மகிழ்வதை பெருமையாகக்கொள்கிறது காற்றுவெளி இதழ்.

*வெண்ணிலா முகவரி:*
*378/2,ஸம் ஸம் வீதி,*
*மருதமுனை- 3 #32314*
இலங்கை

## ஜெயதேவன்

ஒரு மயில் இத்தனை கனமான தோகையை
விரும்பியா
சுமக்கிறது
அணில் வாலைப்போல் இருந்தால்
அழகென நினைக்கலாம் மனதில்
புழுவைத் தின்னும்
எலியைப் பார்த்துப்
பொறாமை படலாம்
தானியம் தின்னும் புறா
ரோஜா பயத்தோடுதான் சிரிக்கிறது.
எதிரிகள் முகாமில் பிறந்தநாள்
கொண்டாடும்
ஒரு ராஜகுமாரியைப்போல
ஆமைகள் கவசமாகவா நினைக்கும் ஓட்டை
மீன்களின் துள்ளல் பார்த்து
உடைத்துவிட நினைக்கக்கூடும்
ஓடுகளை
கிளைகளில் கொம்பு மோதாமல்
போகவண்டுமே என்பதிலே
இரையை விட்டுவிடலாம் கலைமான்
கொம்பு அதற்கு அழகல்ல
தந்தங்களை நினைத்து
கர்வப்படவா போகிறது யானை
காலிலிட்ட விலங்குதான்
அதன் கவலை
உப்புக்கசடை நினைத்து
ஓலமிட்டபடி கரைக்கு ஓடிவரலாம்
கடல்
நல்ல குளியறை தேடி

நன்றி:அநாமிகா ரிஷி

